Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
25°c 24°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 357 | வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 03, செவ்வாய் 19.11.2013

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தை புறக்கணிக்கிறது கூட்டமைப்பு

*தன்னிச்சையாக முடிவெடுத்து நடத்தப்படுவதால்*

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தன்னிச்சையாக முடிவெடுத்து நடத்தப்படுவதன் காரணமாக அதனைப் புறக்கணிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் மாவை. சேனாதிராசா யாழ். மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதத்தில், கூட்டத்துக்கு யார் தலைமை தாங்குவார் என்பது குறித்துத் தெரிவிக்கப்படவில்லை. வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த பின் மாகாண சபை முதலமைச்சர், ஒருங்கிணைப்புக் குழுக்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் அழைப்புக் கடிதங்கள் மாயம்

*பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர்*

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்காக கடந்த வாரம் யாழ். பிரதம தபாலகத்தில் கையளிக்கப்பட்ட கடிதங்கள் பல மாயமாகியுள்ளன. இதனால் நேற்று திங்கட்கிழமை அவசர அவசரமாக நேரடியாக அழைப்புக் கடிதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதங்கள் யாழ். மாவட்ட செயல .

## கமரூனுக்கு நன்றிக் கடிதம்

கொழும்பு, நவ.19

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கைக்கு காலக்கெடு விதித்து சர்வதேச விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தியுள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுக்கு நன்றி தெரிவித்து உலகத் தமிழர்களின் சார்பில் இன்று கடிதம் அனுப்பப்படும் என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண.எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் நேற்று தெரிவித்தார்.

தமிழர்களின் சர்வதேச போராட்டத்துக்குப் பிரிட்டன் முதன்மைப் பங்களிப்பை வழங்கவேண்டும்என இந்தக் கடிதத்தினூடாகக் கோரிக்கை விடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய விடயத்தில் தமக்கிருக்கும்

# மனித உரிமைகளை உறுதிப்படுத்துங்கள்

*இலங்கைக்கு முதல்முறையாக சீனா அதிர்ச்சி வைத்தியம்*

பீஜிங், நவம்பர் 19

மனிதஉரிமைகளைப் பாதுகாக்குமாறும், ஊக்குவிக்கவும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் இலங்கையிடம் சீனா கோரிக்கை விடுத்துள்ளது.



இலங்கை அரசுடன் தொடர்ச்சியாக நல்லுறவைப் பேணிவரும் சீன அரசு பொதுநலவாய மாநாடு முடிவடைந்த கையோடு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

பீஜிங்கில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குயின் காங் இந்தக் கருத்தை வெளியிட்டு இலங்கைக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு பொருளாதார - சமூக வேறுபாடுகளால், மனித உரிமைகள் பாதுகாப்பிலும் வேறுபாடுகள் இருக்கக் கூடும்.

எனவே இலங்கை அரசு மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் முக்கியமாக முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அதேவேளை, உலகின்ஏனைய நாடுகள், ஆக்கபூர்வமான உதவிகளை அந்த நாட்டுக்கு வழங்க வேண்டும் என்று கூறினார்.

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை அரசு

## சர்வதேச விசாரணைக்கு அனுமதித்து துரோகம் இழைத்துள்ளார் ஜனாதிபதி

*இதனை ஏற்கமுடியாது என்கிறது ஐ.தே.க.*

கொழும்பு, நவ.19



"இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அனுமதி வழங்கி நாட்டுக்குத் துரோகம் இழைத்துவிட்டார். பொதுநலவாய மாநாட்டை நடத்தி, அதன் இறுதிப் பிரகடனத்தில் கையெழுத்திட்டதன் மூலம் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை அவர் அங்கீகரித்து விட்டார். இதை ஒருபோதும் எம்மால் ஏற்க முடியாது."

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி நேற்று அறிவித்தது.

பொதுநலவாய மாநாடு என்ற போர்வையில் மனித

## மாவீரர் தினத்தன்றும் மரங்களை நடுவோம்

*வடக்கு விவசாய அமைச்சர் கூறுரை*



யாழ்ப்பாணம், நவ.19

அரசுக்குப் பயங்கரவாதிகள் எனத் தெரிவோர் எமக்கு மாவீரர்கள். அவர்கள் எங்களுடைய இரத்த உறவுகள். நாம் மாவீரர் தினத்தன்றும் மரங்களை நடுவோம் என்று வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, சுற்றுச் சூழல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் இரணைமடுக்குள இடதுகரைவாய்க்காலின் இரு மருங்கிலும் 'தேசத்தின் நிழல்' என்னும் தேசிய மர நடுகைத் திட்டம் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர்மேலும்

## கமரூனின் கருத்துக்கு கூட்டமைப்பு வரவேற்பு

கொழும்பு, நவ.19

"இலங்கை அரசு இழைத்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். இதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமேயில்லை. இது தொடர்பில் இலங்கை அரசுக்குப் பிரிட்டிஷ் பிரதமர் விடுத்த எச்சரிக்கையை நாம் வரவேற்கின்றோம்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எதிர்

## பிரிட்டனின் காலக்கெடுவுக்கு மஹிந்த அரசே முழுப்பொறுப்பு

*கடுமையாகச் சாடுகிறது ஜே.வி.பி.*

கொழும்பு, நவ.19

"ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும், மேற்குலக நாடுகளுக்கும் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாததன் காரணமாகவே இலங்கைக்கு எதிராகப் பிரிட்டன் காலக்கெடு விதித்துள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் மஹிந்த அரசே ஏற்க வேண்டும்."

இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர்ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார். பொதுநலவாயத்தின் தலைமைக் கதிரையைப் பெறுவதற்காக

# வீதியில் யுவதியைத் தொந்தரவு செய்த தென் பகுதி இளைஞர்களுக்குக் கவனிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணுக்கு தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்த பெரும்பான்மையின இளைஞர்களை மடக்கிப் பிடித்த மக்கள் அவர்களுக்கு நல்ல கவனிப்பு வழங்கினர்.

எனினும் சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.பொலிஸார் பெரும்பான்மை இன இளைஞர்களைப் பாதுகாப்பாக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று பின்னர் விடுதலை செய்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்.இராசாவின் தோட்டம் முலவைச் சந்தியை அண்மித்து நேற்றுத் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

அச்சுவேலியைச் சேர்ந்த குறித்த யுவதி இராசாவின் தோட்டப் பகுதியிலுள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார். யாழ்.முலவைச் சந்தியை அண்மித்து அவர் நடந்து சென்றுகொண்டிருந்த போது அவரை 'ஹையஸ்' வாகனத்தில் பின் தொடர்ந்த தென்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் யுவதியுடன் தவறான நோக்கில் வார்த்தைப் பிரயோகங்களைமேற்கொண்டனர். வாகனத்தில் ஏறுமாறும் கேட்டுத் தொல்லை கொடுத்துள்ளனர். எனினும் யுவதி தன்வழியே சென்று கொண்டிருந்தார். இதனால் இளைஞர்கள் தமது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை கடதாசியில் எழுதி அந்தப் பெண்ணுக்கு அருகில் எறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.

அவர்களுக்கு பாடம் புகட்ட எண்ணிய அந்த யுவதி அவர்கள் எழுதிப் போட்டுவிட்டுச் சென்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை எடுத்துச் சென்று தனது சகோதரர்களிடம் கொடுத்து நடந்ததைக் கூறியுள்ளார். இதனையடுத்து யுவதியின் சகோதரர்கள் அவர்களைச் சம்பவம் நடந்த இடத்துக்கு அழைக்குமாறு கூறியுள்ளனர். இதனையடுத்து அவர்கள் எறிந்துவிட்டுச் சென்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்திய யுவதி சம்பவம் நடந்த இடத்துக்கு வருமாறு அவர்களை அழைத்துள்ளார்.

பெரும்பான்மை இன இளைஞர்களும் சம்பவம் நடந்த இடத்துக்கு அதே வாகனத்தில் வந்தனர். அவர்களை யுவதி அடையாளம் காட்ட யுவதியின் சகோதரர்கள் வாகனத்தில் வந்த இரண்டு இளைஞர்களுக்கும் நல்ல கவனிப்பு வழங்கினர். இந்தச் சம்பவம் பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் பறந்தது. விரைந்து வந்த பொலிஸார் பெரும்பான்மையின இளைஞர்கள் இருவரையும் பாதுகாப்பாக மீட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அவர்களைத் தாக்கியதாகக் கூறி யுவதியையும், அவரின் சகோதரர்களையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இதனால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் குறித்த இரண்டு இளைஞர் களுடனும் பொலிஸார் உரையாடினர். அதன் பின்னர் யுவதியின் உறவினர்களைச் சமரசப்படுத்தி இனிமேல் இவ்வாறு இடம்பெறாது என்று கூறினர். இதனையடுத்து இளைஞர்கள் இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரினர்.

இதனையடுத்து குறித்த இளைஞர்கள் வழக்குப் பதிவு செய்யப்படாமல் விடுவிக்கப்பட்டனர். இருவரும் ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-4)

# கைத்தொலைபேசி நிலைய திருட்டு சந்தேகத்தில் இருவர் நேற்று கைது

தென்மராட்சி நவம் 18

சாவகச்சேரி டச்சு வீதியில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கைத்தெலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக சங்கானை பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி இரவு குறித்த விற்பனை நிலையத்துக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றனர்.

திருட்டுத் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இதன்போது திருட்டுப் போன தொலைபேசிகளில் ஒன்று இயங்கியமை தெரிய வந்தது. குறித்த தொலைபேசி இலக்கத்தை பின் தொடர்ந்த பொலிஸார் சங்கானையில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரைக் கைது செய்தனர். அவர் வழங்கிய தகவலின்படி மற்றுமொரு பண்டத்தரிப்பு வாசியும் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த இருவரும் இன்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ- 9)

# பரிசில் வழங்கும் நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு முரசுமோட்டை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சி. இளந்திவாகர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரனும் சிறப்பு விருந்தினராக கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசாவும் கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் இ.கிருஷ்ணகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களான செ.புஸ்பராசா, சி.தவபாலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-6)

# பாடசாலை அதிபருக்கு எதிராக நடவடிக்கை

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.19

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் தமிழ் கலவன் பாடசாலை அதிபருக்கு எதிராக வட மாகாண கல்வித் திணைக்களம்சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

குறித்த பாடசாலை அதிபர், பாடசாலையில் நிதி மோசடி உட்பட சட்ட முறையற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும், பாடசாலை ஆசிரியர்களது இடமாற்றங்களை பக்கச் சார்பாக முன்னெடுக்கிறார் என்றும் தெரிவித்து அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களும், மாணவர்களது பெற்றோரும் இணைந்து நேற்றுமுற்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த நிலையில் குறித்த பாடசாலை அதிபர் தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

> “ குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாடசாலை அதிபரை தொடர்புகொண்டு கேட்ட போது அதனை அவர் மறுத்தார்.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாடசாலை அதிபரை தொடர்புகொண்டு கேட்ட போது அதனை அவர் மறுத்தார். தான் பாடசாலை வளர்ச்சிக்காகவே பாடுபடுவதாகவும் ஆசிரியர் இடமாற்றம் குறித்து அவர்களது விருப்பத்துக்கு அமைவாகவே இடமாற்றம் செய்ததாகவும் சிலர் தவறான எண்ணங்களைக் கொண்டு இவ்வாறு போராட்டங்களை தூண்டி விடுவதாகவும் தெரிவித்தார். (ஜ-4-5)

# களினோவுக்கு எதிராக கொழும்பில் மாநாடு

அரசு திருத்தங்களுடன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டிருக்கும் களினோ ஊக்குவிப்புச் சட்ட மூலத்தை உடன் வாபஸ் பெறுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 27ஆம் திகதி சர்வமதத் தலைவர்களின் தேசிய மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது.

களினோவுக்கு எதிர்ப்பு வெளியிடும் இந்து, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் இதன்போது தத்தமது கருத்துகளை முன்வைக்கவுள்ளனர்.

களினோவுக்கு எதிரான இந்த தேசிய மாநாடு குறித்து சில சர்வமதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார். அத்துடன், நாட்டிலுள்ள அனைத்து சர்வமதத் தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

உபாயமார்க்க அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் களினோக்களுக்கு விசேட வரிச்சலுகையை வழங்குவதற்கான சட்டமூலத்தை கடந்த மாதம் அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டிருந்தது.

இந்தச் சட்டமூலத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய முதலானவை கடும் எதிர்ப்பு வெளியிட்டதுடன், மகாநாயக்க தேரர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

# வலி.மேற்கு பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் இணைப்பு

யாழ்ப்பாணம், நவ.19

வலி.மேற்கு பிரதேச சபையின் புதிய உறுப்பினராக சண்முகலிங்கம் சபேசன் நேற்று பதவியேற்றுக்கொண்டார்.

வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி.நா.ஜங்கரனிடம் தனது பதவிக்கான கடிதத்தைக் கொடுத்து நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார்.

வலி.மேற்கு பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் வீரசிங்கம் சிவகுமார் பதவியில் இருந்து விலகியதை அடுத்து புதிய உறுப்பினராக ச.சபேசன் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஜ-50)

# வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அபேஸ்

வலி தென்மேற்கு நவ 19

மாலை வேளை மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணைப் பின் தொடர்ந்து சென்ற இரு இளைஞர்கள் அவர் அணிந்திருந்த ஒரு லட்சம்ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பியோடினர்.

இந்த கொள்ளைச் சம்பவம் சுதுமலை வடக்குப் பகுதியில் ஈஞ்சடி வைரவர் ஆலயத்துக்கு அண்மையில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் கால்நடைத் திணைக்களத்தில் பணியாற்றும் குறித்த பெண் நேற்று முன்தினம் நல்லூர் முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற கார்த்திகை தீப வழிபாட்டில் கலந்து கொண்ட பின் இரவு 7மணியளவில் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றுள்ளார். அவரைப் பின் தொடர்ந்து சென்ற இரு இளைஞர்கள் மக்கள் நடமாட்டமில்லாத பகுதியில் வைத்து அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடி விட்டனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ-400-115)

# மதகுருவும் மக்களும் தாக்கப்பட்டமை புலனாய்வாளர்களின் திட்டமிடப்பட்ட செயல்

## யாழ்.மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.19

காணாமற்போனோரின் உறவுகள் முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் மதகுருமார் தாக்கப்பட்டதை கண்டித்துள்ள யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு, பிரிட்டன் பிரதமரை நெருங்கவிடாமல் அரச சார்பு ஆதரவுக் குழுக்கள் மற்றும் அரச புலனாய்வாளர்கள் இதற்கென களமிறக்கப்பட்டமையையும் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் அருட்திரு எஸ்.வி.பி.மங்களராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இறுதிப் போரின் போதும் அதனைத்தொடர்ந்தும் இலங்கையில் பொது மக்கள் பலரும், மதகுரு மார்களும் காணாமற் போயிருக்கின்றனர். இவர்கள் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள், விசாரணையின் பின் விடுவிக்கப்படுவார்கள் என்ற இராணுவத்தினரின் வார்த்தையை நம்பிக் கையளித்து இன்று வரையில் வீடு திரும்பாதவர்கள் என்று பல்லாயிரக் கணக்கானவர்கள் உள்ளனர்.

இவர்கள் தொடர்பில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் பல இடங்களில் நடத்தப்பட்டும் எதுவித பயனுமில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டன் பிரதமர் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வந்த போது, கவனவீர்ப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்கு தடை விதிக்குமாறு கோரி பொலிஸார் நீதிமன்றத்தை நாடியபோதும் நீதிமன்றம் அதற்கு மறுத்துவிட்டது. பிரிட்டன் பிரதமர் கமரூன், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை யாழ்.பொதுநூலகத்தில் சந்தித்து கலந்துரையாடிவிட்டு வெளியேறும் போது அவரிடம் மனுக்களை கையளிக்க காணாமற்போனோரின் உறவுகள் முயற்சித்தனர். இதன்போது பொலிஸார் அவர்களைத் தடுத்து தாக்கியுள்ளனர். இதனால் பெண்கள் நிலத்தில் வீழ்ந்தனர். சிலருக்கு அடி உதை விழுந்தது. விழுந்த ஒரு வயோதிபப் பெண்ணுக்கு உதவ முயன்றபோது மதகுரு ஒருவரும் தள்ளி விழுத்தப்பட்டு உதைக்கப்பட்டார்.

மதகுருமார் மீதும், மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களை யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு மிகவும் வன்மையாக கண்டிக்கின்றது.

காணாமற் போனோரின் உறவுகள் பிரிட்டன் பிரதமரை நெருங்கவிடாமல் மிகவும் தந்திரமாகத் தடுக்கப்பட்டதையும் அரச சார்பு ஆதரவுக் குழுக்கள் மற்றும் அரச புலனாய்வாளர்கள் இதற்கென்று பிரத்தியேகமாக கொண்டுவந்து இறக்கப்பட்டு மக்கள் உணர்வை கொச்சைப்படுத்தியதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (ஜ-5)

'ஈ– குடித்தொகை' திட்டம்

## அறிமுகச் செயல்திட்டம் நல்லூர் பிரதேச செயலகத்தில்



யாழ்ப்பாணம், நவ.19

இலத்திரனியல் குடித் தொகை 'ஈ– குடித்தொகை' வேலைத்திட்டத்தை நடை முறைப்படுத்தல் தொடர்பான பிறப்பு, இறப்பு தகவல்களை வழங்குவதற்கான படி வங் களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று திங்கட் கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற் றது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் நிகழ்வை ஆரம்பித்து வைத் தார். இந்த நிகழ்வில் பதி வாளர் நாயகம் ஈ.எம்.குண சேகர மேலதிக பதிவாளர் நாயகம் சதாசிவஐயர் , உதவி பதிவாளர் நாயகம் (தொழில்நுட்பம்) வசந்த சந்திலிகம், வடக்கு பதிவா ளர் ஆனந்த ஜெயரட்ண, மாவட்ட காணி மேலதிக பதிவாளர் எஸ்.பிரபாகரன் ஆகியோருடன் பிரதேசத் தைச் சேர்ந்த பதிவாளர் கள், வைத்தியசாலை பதிவா ளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (வ-7)

சுதேச வைத்தியர்களின் ஆங்கில மருந்து பாவனை

# கண்காணிக்க விரைவில் திடீர் பரிசோதனைக் குழு

அச்சுவேலி, நவ.19

தனியார் துறை ஆயுள் வேத மற்றும் சுதேச வைத் தியர்கள் ஆங்கில மற்றும் ஐரோப்பிய மருந்துகளை பயன்படுத்தி நோயாளருக்கு சிகிச்சை அளிப்பதை கண் காணித்து திடீர் பரிசோத னைகளை மேற்கொள்ள வசதியாக சுதேச வைத்தியத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பணிப் பாளர் அலுவலக அதிகாரி கள் உள்ளடங்கிய கூட்டுக் குழுக்கள் செயற்படவுள்ளன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத் துக்கும் தனியார்துறை ஆயுள் வேத மற்றும் சுதேச வைத் தியர்களுக்குமிடையிலான கலந்துரையாடலில் இவ் வாறு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

கலந்துரையாடல் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையா ளர் மருத்துவர் திருமதி சி.துரைரத்தினம் தலை மையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் ஆயுள் வேத சுதேச வைத்தியத் தின் தனித்துவம், மூலிகை உற்பத்தி, சுதேச மருந்து தயாரிப்பு, ஆயுள்வேத மற் றும் சுதேச வைத்தியம் தொடர்பான விழிப்புணர்வு, வைத்தியத் துறையை மேம்படுத்துவதற்கான நட வடிக்கைகள் மற்றும் தனி யார் துறை ஆயுள்வேத சுதேச வைத்தியர்கள் சம காலச் சூழ்நிலையில் எதிர் நோக்கும் பிரச்சினைகள்; அதற்கான தீர்வுகள், நட வடிக்கைகள், சுகாதார மேம் பட்டுக்கான செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

தனியார்துறை ஆயுள்வேத வைத்தியர்கள் சுதேச வைத்தியர்கள் ஆங்கில, ஐரோப்பிய மருந்து வகை களைப் பயன்படுத்தி நோயா ளர்களுக்கு வைத்தியம் செய்வது தொடர்பாக ஆரா யப்பட்டது. கண்காணிப்பு மற்றும் திடீர் பரிசோத னையின் போது ஏற்படும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்கும் உரிய முறையில் கண்காணித்து சோதனைகளை மேற்கொள் வதற்கும் சுதேச வைத்தியத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சுகாதார பணிப்பா ளர் அலுவலக அதிகாரிகள் இணைந்த நிலையில் மேற்கொள்வது என தீர் மானிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு மற்றும் திடீர் பரிசோதனைக் குழுக்களை மிக விரைவில் செயற்படு வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று சுதேச வைத்தியத் திணைக் கள அதிகாரி தெரிவித்தார். (வ-11)

**தனியார்துறை ஆயுள்வேத வைத்தியர் கள் சுதேச வைத்தியர் கள் ஆங்கில, ஐரோப் பிய மருந்து வகை களைப் பயன்படுத்தி நோயா ளர்களுக்கு வைத்தியம் செய்வது தொடர்பாக ஆரா யப்பட்டது.**

டெங்கு பரவும் சூழல்


## காணி உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

தென்மராட்சி, நவ.19

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் பற்றைகளா கக் காணப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு எதி ராக சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸார் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவாகக் காணி களை வைத்திருந்ததாக வழக் குத் தாக்கல் செய்துள்ளனர்.

பொலிஸாரும் பொது சுகா தாரப் பரிசோதகர்களும் இணைந்து நடத்திய பரி சோதனைகளின் போது பற் றைகளாகக் காணப்பட்ட காணிகளின் உரிமையாளர் களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 5 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மாகாண சுகா தார திணைக்களத்தின் டெங்கு ஒழிப்பு வாரத்தில் பெருமளவானோருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்று தெரி விக்கப்பட்டது. தென்மராட் சிப் பிரதேசத் தில் கடந்த 15 ஆம் திகதி வரை 4 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள் ளமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளதால் மேலும் டெங்கு நோய் பரவாமல் தடுப்ப தற்காக காணி உரிமையா ளர்கள்மீதுவழக் குத்தாக்கல் மேற்கொள்ளப் படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகைத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.20 மணி யளவில் இடம்பெற்றது. ஆலய வாசலில் சொக்கப் பானை எரிக்கப்படுகின்றது. சுவாமி வெளிவீதியுலா வருகிறார். (வ-86)

## நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவுக்கு புதிதாக இணையத்தளம்

### போதனா வைத்தியசாலையில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.போதனா வைத்திய சாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையத்துக்கான உத்தி யோகபூர்வமாக இணை யத்தளம் நேற்று திங்கட்கி ழமை ஆரம்பித்து வைக் கப்பட்டுள்ளது.

மக்களுக்கு நீரிழிவு குறித்து விழிப் புணர்வையும் அறி வூட்டலையும் வழங்கக் கூடியதான மக்கள் தளமாக உருவாக்கப்பட்டது. மருத்து வரீதியான கட்டுரை, கவி தைகள், காணொலிகள், செய்திகள், சிந்தனைக் குரிய விடயங்களை உள் ளடக்கிய இந்த இணையத் தளத்தின் மூலம் சுகாதார ரீதியான சந்தேகங்க ளுக் கும் விளக்கம் பெறக் கூடி யதாக உள்ளது www. jaffnadiabeticcentre .org என்ற இணையத்தள முக வரியுடன் தொடர்பு கொள்ள முடியும்.

யாழ்.போதனா வைத்தி யசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா இணை யத்தளத்தை வைத்தியசாலை யின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் ஆரம்பித்து வைத் தார். வைத்திய கலாநிதி எஸ்.சிவன்சுதன், வைத்திய கலாநிதி ஆர்.பரமேஸ்வரன் உட்பட வைத்திய அதிகாரி கள், வைத்தியசாலை உத்தி யோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண் டனர்.(வ-7)

## போலி நகை மூலம் பணம் பெற்ற ஆசாமி

தென்மராட்சி, நவ.19

சாவகச்சேரி நகர்ப் பகுதி யில் உள்ள வங்கி ஒன்றில் நபர் ஒருவர் போலி நகை களைக் கொடுத்துப் பணம் பெற்றுள்ளமை தெரியவந் துள்ளது.

வங்கியில் மீட்கப்படாத தங்க நகைகள் ஏலவிற் பனைக்கு விடுவதற்காக எடுக்கப்பட்ட போது போலி நகை இனங் காணப்பட்டது.

குறித்த போலி நகைகளை அடைவு வைத்தவர் போலி முகவரியைக் கொடுத்ததால் அவரைக் கண்டுபிடிக்க முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக வங்கி முகாமையாளர் சாவகச் சேரி பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்துள்ள தாக பொலிஸார் நேற்று நீதிமன்றில் அறிக்கை தாக் கல் செய்துள்ளனர். (வ-9)

## வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய் வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றவுள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இறுதி வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் தொடர்புடைய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியச் சங்கத்தின யாழ்.மாவட்டச் செயலாளர் எஸ்.லோகேஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-14)



வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிலைய இலவச பயிற்சித் திட்டத்தின்கீழ்-ஆடை அமைத்தல் பயிற்சி பெற்ற, 4 அணிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான ஆடை அமைத்தல் உயர் தொழில் பயிற்சி அண்மையில் கொக்குவில் வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிலைய பயிற்சிக் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
இதன்போது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூன்று தொழிற்றுறை தையல் இயந்திரங்கள் பயிற்சிநெறி பயனாளிகளிடமும், ஆசிரியையிடமும் கையளிக்கப்பட்டன. (வ)

# அருட் தந்தையர் மீதான தாக்குதலுக்கு சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம். நவ. 19
தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்காக குரல் கொடுக்கும் சர்வதேச சமூகம், அருட்தந்தையர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாக நீதியோடு கூடிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
கடந்த 15 ஆம் திகதி யாழ். பொது நூலகத்துக்கு முன்பாக இடம் பெற்ற கவன வீர்ப்புப் போராட்டத்தின் போது அருட் தந்தையர்கள் உட்பட பலரும் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தனர். இந்தத் தாக்குதல்சம்பவத்தை கண்டித்து யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் காணாமற்போனோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் அருட் தந்தையர்களின் மீதும் மக்கள் மீதும் நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதோடு இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோருகின்றோம்.
யாழ்ப்பாணம் வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிற் கமரூனைச் சந்தித்து தங்களுடைய மனவேதனைகளை உள்ளடக்கிய மனுவைக் கையளிப்பதற்காக காணாமற்போனோரின் உறவுகள் அமைதி வழியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதனைக் குழப்புவதற்காகவும் டேவிற் கமரூனை சந்திப்பதை தடுப்பதற்காகவும் பொலிஸார் மிகவும் கீழ்த்தரமாகச் செயற்பட்டனர்.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள், பிள்ளைகளை இழந்து தவித்த பெற்றோர்கள் அவர்களுக்குப் பக்கபலமாக நின்ற மதத் தலைவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மக்களின் பாதுகாவலர்கள் என்றும் நண்பர்கள் என்றும் சொல்லிக் கொள்கின்ற பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.
எனவே தமிழ் மக்களின் உரிமை வாழ்வுக்காக குரல் கொடுக்கும் சர்வதேச சமூகம் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நீதியோடு கூடிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி நிற்கின்றோம். '- என்று உள்ளது. (ஐ-400)

## திருத்தத்துக்கு வைத்த தராசு மாயம்

வலி.தென்மேற்கு, நவ.19
வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான தலைமைக் காரியாலயத்தில் திருத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான மூடைகள் நிறுக்கும் மேடைத் தராசு மாயமாக மறைந்து விட்டது. குறித்த மோசடி குறித்து கேள்வி எழுப்பியுள்ள உறுப்பினர்கள், இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு செயலாளரைக் கோரியுள்ளனர்.
பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் பழுதடைந்த நிலையிலிருந்த குறித்த தராசை திருத்துவதற்காக மானிப்பாயிலுள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலய பழைய கட்டடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.
பல மாதங்களாக அங்கு வைக்கப்பட்டிருந்த தராசு மாயமாய் மறைந்தது குறித்து சிற்றூழியர் மூலம் அறிந்து கொண்ட பிரதேச சபை உறுப்பினர், இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபைச் செயலாளரைக் கோரியுள்ளனர். (வ-115)

குடமுருட்டி ஆற்றில் இடம்பெறும்

## மணல் அகழ்வு தொடர்பாக மக்கள் கடும் விசனம்




அக்கராயன், நவ.19
பூநகரி குடமுருட்டி ஆற்றில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.
பூநகரியில் மணல் அகழ்வு தொடர்ந்து இடம்பெறுமானால் உவரின் பாதிப்பு அதிகளவில் ஏற்படுமென பூநகரியில் இடம் பெற்ற கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து மணல் அகழ்வு பெருமளவில் இடம்பெற்று வருகின்றது.
இதேவேளை பூநகரியின் கௌதாரி முனைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு களவாக மணல் எடுத்துச் செல்லப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
பூநகரியிலிருந்து மணல், மரங்கள் ஆகியவற்றைப் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## பச்சிலைப்பள்ளியில் மீளக்குடியேறிய போரால் பாதிப்புற்ற மீனவருக்கு கடற்றொழில் உபகரணங்கள்

வலி.தென்மேற்கு, நவ.19
போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பச்சிலைப்பள்ளி பிரதேசத் தில் மீளக்குடியேறிய கடற்றொழிலாளர்களுக்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான வள்ளம், வலை, இயந்திரங்கள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகள் தெரிவு இடம் பெற்று வருகின்றது.
பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள கிளாலி, புலோப்பளை, அறத்தி நகர், சங்கத்தார் வயல் ஆகிய நான்கு கடற்றொழிலாளர் கூ.சங்கங்களில் அங்கத்தவர்களாக இருக்கும் கடற்றொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட மீன்பிடி உபகரணங்கள் இல்லாமையால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு குடும்பங்களை வழிநடத்த முடியாமல் திண்டாடினர்.
அவர்களின் நிலை குறித்து பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாசம் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளின் உதவியை நாடினர். அதைத் தொடர்ந்து திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக ஐசாக் நிறுவனம், யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுமதியுடன் ஒரு கோடி ரூபா பெறுமதியான வள்ளம், வலை, இயந்திரங்கள் ஆகியவற்றை 50 வீதம் மானியமாகவும், 50 வீதம் சுழற்சி முறைக் கடனாகவும் வழங்க முன்வந்துள்ளது.
இந்த நிலையில் கிளாலி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்துக்கு 9 தும்புக் கண்ணாடியிலான வள்ளங்களும், இயந்திரங்களும், புலோப்பளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு 2 தும்புக் கண்ணாடியிலான வள்ளங்களும், இயந்திரங்களும், அறத்தி நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு 4 தும்புக் கண்ணாடியிலான வள்ளங்களும் , இயந்திரங்களும், சங்கத்தார் வயல் கடற்றொழிலாளர் கூ. சங்கத்துக்கு 12 தும்புக் கண்ணாடியிலான வள்ளங்களும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன. (வ-115)

## முக்கொம்பனில் அகற்றப்பட்டது பிரதேச சபையின் பெயர்ப் பலகை

தவிசாளரால் முறைப்பாடு தெரிவிப்பு

யாழ்ப்பாணம். நவ. 19
பூநகரி பிரதேச சபையின் பெயர்ப்பலகை முக்கொம்பன் பகுதியில் அகற்றப்பட்டமை தொடர்பாக பிரதேச சபைத் தலைவர் பி. சிறிஸ்கந்தராஜா கிளிநொச்சி அரச அதிபரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் வைத்து இந்த முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக பூநகரிப் பிரதேச சபைத் தலைவரிடம் கேட்டபோது:
பூநகரி பிரதேச செயலரும் எமது பிரதேச சபைச் செயலாளரும் முக்கொம்பன் பகுதிக்குச் சென்று நட்ட பூநகரிப் பிரதேச சபையின் பெயர்ப் பலகை இனந் தெரியாதவர்களால் அகற்றப்பட்டுள்ளது.
இது தொடர்பாக அரச அதிபரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளேன்.
அவர் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்குமாறு எனக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவித்தார். (க-18)


# மரண அறிவித்தல்

## செல்வராசா காண்டீபன்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா காண்டீபன் நேற்று (18.11.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல் : குடும்பத்தினர்.
துரை வீதி, இணுவில் தெற்கு, இணுவில்

## சிவாஸ் தளபாடம்

மலிவு விலையில் அலுமாரிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : சிவன் கோவிலடி, சுன்னாகம். 077 6341119

## விற்பனைக்கு/வாடகைக்கு

சுச்சேரிக்கு மிக அண்மையில் 3பரப்புக் காணியில் அமைந்த வீடு 4 அறைகள், 2குளியலறைகள், 2சமையலறை, 2விசாலமான வரவேற்பறை மற்றும் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய நல்ல சூழலில்உள்ள வீடு உடன் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்ப டும்.
தொடர்பு : 077 0609178, 075 5316574

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான **திருமதி இராஜலோசனா தயசீலன்** அவர்களின் அன்புத் தந்தையார்.

## ச. பூரணானந்தசிவம்

அவர்கள் 16.11.2013 இல் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
ஆசிரியர்கழகம், யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை நீர்வேலி.



## நயினாதீவுக்கு பஸ்

### சனிக்கிழமை கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

நயினாதீவு உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தும் நோக்கில் கடந்த சனிக்கிழமை இ.போ.ச. யாழ்.சாலை புதிய பஸ் ஒன்றை அங்கு அனுப்பியுள்ளது.

கடற் பாதையூடாக யாழ். சாலை முகாமையாளர் எஸ்.குணபாலசெல்வம், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜா, வட மாகாண தேசிய ஜனநாயக ஊழியர் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் என்.கெங்காதரன், செயலாளர் ஏ.அருட்பிரகாஸ் ஆகியோர் பஸ்ஸை நயினாதீவு மக்களிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கருணாகரமூர்த்தி உப அலுவலகப் பொறுப்பாளர் எஸ்.மோகனரூபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-7)



வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும் போது ஊசி போடுபவர் நாயினால் கடிபடாமல் இருப்பதற்கு நாயின் வாய்க்குப் பாதுகாப்புக் கவசம் (மவுத்காட்) அணியும் உபகரணம் நீண்ட காலத்தின் பின்னர் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. கொடிகாமம் பகுதியில் சனிக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்ட போது பாதுகாப்பு கவசம் பொருத்தப்பட்டே ஊசி மருந்து ஏற்றப்படுகிறது. (வ-9)

தகைமை அடிப்படையிலேயே

# தொழிலாளர் நியமனம்

மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

சட்ட திட்டங்களுக்கு அமைவாக தகைமைகளின் அடிப்படையிலேயே தொழிலாளர்களுக்கு நியமனம் வழங்கப்படும். இந்த நடைமுறை சகல திணைக்களங்களுக்கும் பொதுவானது என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் கடமையாற்றிய ஊழியர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியுடன் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதால் தமக்கான தொழில் வாய்ப்பை இழந்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட தொழிலாளர்களைச் சந்தித்த மாநகர சபை ஆணையாளர் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே ஊழியர்களுக்கான நியமனத்தை யாழ்.மாநகர சபை வழங்கி வருகிறது.

அத்துடன் தகை மைகளும் கருத்தில் கொள் ளப்படுகின்றன. இந்த நடைமுறை சகல திணைக்க ளங்களுக்கும் பொருந்தும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு தகைமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் குறைந்த தகைமைகளைக் கொண்டுள்ள தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (வ-7)

" "

**சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே ஊழியர்களுக்கான நியமனத்தை யாழ். மாநகர சபை வழங்கி வருகிறது. அத்துடன் தகைமைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.**


## மயானப் பகுதியை துப்புரவாக்க கோரிக்கை

நீர்வேலி வடக்கு சீயாக்காடு மயானத்தில் பிரதேச சபை கழிவுகளை கொட்டி சுகாதார சீர்கேடான பகுதியாக மாற்றுவதைத் தவிர்த்து மயானப் பகுதியை துப்புரவு செய்யுமாறு நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வலி.கிழக்கு பிரதேச சபை தலைவரிடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் த.பரராசசிங்கம் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள மனுவில் "நீர்வேலி வடக்கு சீயாக்காடு மயானப்பகுதிகழிவுப்பொருள்கள் நிரம்பி சுகாதாரச் சீர்கேடான பகுதியாக காணப்படுகின்றது. இதனால் மயானத்துக்கு இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்வோர் பல்வேறு அசௌகரியங்களைஅனுபவிக்கவேண்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்

## புதிய மண்டபம் விமரிசையாகத் திறப்பு





யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் புதிய மண்டபத் திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை தீபத் திருநாளன்று கோலாகலமாகத்திறந்துவைக்கப்பட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

முன்னதாக விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றி நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. தலைமை உரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், பிரதம விருந்தினர் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன. மண்டபத்தை நிர்மாணித்த கட்டடக் கலைஞர் எஸ்.ரவிகரனுக்கு ஆணையாளர் விஸ்வரூபன் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். சைவச் சிறார்களின்இறைஆராதனை மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பெருமளவு பொதுமக்களும் கலந்து கொண்டனர். (வ-7)



## கடற்பாதைச் சேவைக்கென நேரக் கணிப்பாளர் வேண்டும்

### படகு உரிமையாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.19

நயினாதீவு- குறி காட்டுவான் சேவையில் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள கடற்பாதை நயினாதீவின் அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுவாக்க உதவுவதால் நயினாதீவு- குறிகாட்டுவான் படகு உரிமையாளர் சங்கம் அது தொடர்பாக ஆட்சேபம் எதனையும் தெரிவிக்கவில்லை.

எனினும்கடற்பாதைச்சேவை குறித்த நேர அட்டவணையின்படி அமைவதுடன் படகு ஊழியர்கள் பாதிப்படையாத வகையில் படகுச் சேவைகள் அமையவும் அதற்கென அரசால் நேரக் கணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும் என்று நயினாதீவுப் படகு உரிமையாளர் சங்கத்தின் தலைவரும், செயலாளரும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:- கடற்பாதைச் சேவையில் படகு ஊழியர்கள் 250 பேரின் குடும்பங்கள் பாதிப்படையாமல் இருக்கக் கூடியதாக நேர அட்டவணை அமைய வேண்டும். தற்போது குறிகாட்டுவானில் இருந்து சில சமயங்களில் மிகக் குறைந்த பயணிகளுடனேயே நாம் திரும்ப வேண்டி ஏற்படுகின்றது. குறித்த நேரத்துக்கு முன்னதாகவே புறப்பட வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. எனவே அரசால் நியமிக்கப்படும் நேரக் கணிப்பாளர்கள் கடமையில் இருந்தால் நாம் எமக்குரிய நேரங்களில் படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தக் கூடியதாக இருக்கும். 2009 இல் படகுக் கட்டணமாக ரூபா 30 அறவிடத் தீர்மானிக்கப்பட்டது. போக்குவரத்துக் கட்டணம் தரைவழிப் பாதையில் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் எரிபொருள், கொடுப்பனவுகள் அதிகரித்த நிலையிலும் தொடர்ந்தும் ரூபாவே 30 கட்டணமாக அறவிடப்படுகிறது. சில சமயங்களில் மிகக் குறைந்தளவு பயணிகளுடன் படகுகள் செல்கின்றன. அரைமணி நேரத்துக்கு ஒருதடவைசேவையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்போதுவேறுதொழில்களை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் கூட இல்லாத நிலையில் படகு ஊழியர்கள் மிகச் சிரமமடைகின்றனர். சுனாமி மற்றும் இயற்கை இடர்களின் போது எமது படகுகள் சேதத்துக்குட்பட்டபோதும் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்டமை போன்ற நிவாரண உதவிகள் எமக்குக் கிடைக்கவில்லை என்று குறித்த படகு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி.தனபாலசிங்கமும், செயலாளர் கா.கோபாலசிங்கமும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நாம் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளோம். இந்தப் பிரச்சினைகள் குறித்து ஒரு கலந்துரையாடலை நடத்தி நல்ல தீர்வு ஒன்றை எட்ட அதிகாரிகள் முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம். பிரச்சினைகள்குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுவிடின்நாம்படகுச்சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை எனவும் குறிப்பிட்டனர். (வ-7)

## தி.மு.கவில் சேர்ந்ததால் காதை இழந்த பரிதாபம்

சென்னை, நவ.19

அ.தி.மு.க் கட்சியில் இருந்து தி.மு.க. கட்சிக்கு மாறிய ஒருவர் அதனால் தனது காதை இழந்துள்ளார்.

சேலத்தைச் சேர்ந்தவர் தேவராஜ். அ.தி.மு.க. கிளைச் செயலாளரான இவர் சில மாதங்களுக்கு முன்னர் தி.மு.கவில் இணைந்து கொண்டார்.

தற்போது ஏற்காடு இடைத் தேர்தல் பரப்புரைகள் இடம் பெற்றுவரும்நிலையில்அ.தி. மு.க. உறுப்பினர்களும், தேவராஜும் சந்தித்துள்ளனர். அங்கு கட்சி மாறியமை தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் தேவராஜின் காதைக் கடித்துத் துண்டாக்கிவிட்டனர் அ.தி.மு.க. தொண்டர்கள்.

இதுகுறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ற)



தமிழகத்தில் கடந்த இரு நாள்களாகப் பெய்துவரும் கனமழை காரணமாக இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். கனமழை காரணமாக வீதிகள் எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மையம் காரணமாக மழை மேலும் இரு தினங்களுக்கு நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ற)

## நாடாளுமன்றில் ஆங்கில மொழியை தடை செய்க

புதுடில்லி, நவ.19

இந்திய நாடாளுமன்றத்தில் ஆங்கில மொழி தடைசெய்யப்பட வேண்டும் என்று சமாஜ்வாதி கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் கூறும்போது,

"நாட்டில் ஹிந்தி மொழியை ஊக்குவிக்க வேண்டும். ஹிந்தி மொழியில் வாக்குகளைக் கேட்கும் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் ஆங்கில மொழியில் உரையாற்றுகின்றனர்.


இந்தச் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டியது அவசியம். எனினும் நாங்கள் ஆங்கில மொழிக்கு எதிரானவர்கள் அல்ல" என்று தெரிவித்துள்ளார். (ற)

# கறுப்புப் பண விவரம் பகிரங்கப்படுத்தப்படும்

## இந்தியாவை மிரட்டுகின்றது பாக். உளவு அமைப்பு

புவனேஸ்வர், நவ.19

பாகிஸ்தான் மீது நடவடிக்கை எடுத்தால் இந்தியாவில் உள்ள அமைச்சர்களின் கறுப்புப் பண விவரங்களைப் பகிரங்கப்படுத்துவோம் என்று பாகிஸ்தான் உளவு அமைப்பு (ஐ.எஸ்.ஐ.) மிரட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார் சுப்பிரமணிய சுவாமி.



அண்மையில் பாரதிய ஜனதாக் கட்சியில் இணைந்து கொண்ட சுப்பிரமணிய சுவாமி நேற்றுமுன்தினம் ஒரிசா மாநிலம் புவனேஸ்வரில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறும்போது,

### பணப் பரிமாற்றம்

"இந்திய அமைச்சர்களின் கறுப்புப் பணப் பரிமாற்றங்கள் அனைத்தும் டுபாயில் இருக்கும் ஹவாலா எனப்படும் கும்பலூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அந்தப் பரிமாற்றங்கள் ஐ.எஸ்.ஐ. மற்றும் சர்வதேச தாதாவான தாவூத் இப்ராகிம் ஆகியோருக்குத் தெரியாமல் நடக்கவே நடக்காது."

### மிரட்டும் ஐ.எஸ்.ஐ.

"பாகிஸ்தான் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டால் இந்திய மத்திய அமைச்சர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணம் தொடர்பான விவரங்களை வெளியிட்டு விடுவோம் என்று மிரட்டுகின்றது. அதனாலே இந்த அரசு பாகிஸ்தான் இராணுவம் தாக்கினாலும் மென்போக்கையே கடைப்பிடிக்கின்றது."

### 360 லட்சம் கோடி

"இந்தியாவில் உள்ளவர்கள் சுமார் 70 வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப்பணத்தை குவித்து வைத்துள்ளனர். அவற்றின் மொத்தப் பெறுமதி சுமார் 360 லட்சம் கோடி ரூபாவாகும். அவற்றை நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு இந்த கையாலாகாத ஐ.மு.கூட்டணி அரசை மாற்ற வேண்டும். தீவிரவாதம் இந்தியாவுக்குப் பெரும் சவால். அதனைச் சமாளிக்க உறுதியான கொள்கைகள் கொண்ட அரசு தேவை." என்று தெரிவித்துள்ளார் சுவாமி. (ற)

## மோடி பயங்கரவாதி

### அமைச்சரின் கருத்தால் சர்ச்சை

புதுடில்லி, நவ.19

பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி இந்தியாவின் மிகப் பெரும் பயங்கரவாதி என்று தெரிவித்துள்ளார் பிகார் மாநில வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங்.

"இந்தியாவின் மிகப்பெரிய பயங்கரவாதி மோடிதான். அவரது சுபாவமே மிரட்டுவதுதான். மற்றவர்களின் உணர்வுகளை மதிக்காது, மற்றவர்களை மிரட்டி அடிபணிய வைப்பதுமே அவரது பாணி. எங்கே தன்னை கொன்றுவிடுவார்களோ என்ற பயத்தில் எப்போதும் பாதுகாப்புப் படையுடனே இருப்பவர்தான் மோடி" என்று தெரிவித்துள்ளார் அவர்.

பிகார் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் இந்தக் கருத்தால் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. (ற)


## சச்சின் ஓய்வு: தூக்கில் தொங்கினார் இரசிகர்

பாட்னா, நவ.19

சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றதால் மனவேதனை அடைந்த இரசிகர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

குஜராத் மாநிலம் பூஜ் மாவட்டத்தில் உள்ள வோர்லி கிராமத்தை சேர்ந்த இளைஞர் விஜய் கோவிந்த் (20). இவர் சச்சின் டெண்டுல்கரின் தீவிர ரசிகர். சச்சின் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த நாளில் இருந்தே மிகுந்த மன வேதனையில் இருந்துள்ளார் . கடந்த ஒரு வாரமாக தனது நண்பர்களிடம், சச்சின் ஓய்வு பெறும் நாள்தான் தனது வாழ்வின் இறுதிநாள் என்று கூறிப் புலம்பிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் சச்சின் ஓய்வு பெற்ற தினத்தன்று அதைத் தாங்க முடியாத விஜய் தனது வீட்டில் தூக்கில் தொங்கி தற் கொலை செய்துகொண்டுள்ளார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ற)



இந்தியக் கடற்படையில் 'ஐ.எஸ்.எஸ். விக்ரமாதித்யா' விமானந்தாக்கிக் கப்பல் உத்தியோகபூர்வமாக இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு ரஷ்யாவின் செவ்மோஷ் கப்பல் கட்டும் தளத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி மற்றும் இந்தியக் கடற்படை உயரதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

ரஷ்யாவால் வழங்கப்பட்ட இந்தக் கப்பல் மீள் கட்டுமானத்தின் பின்னர் தற்போது இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த விமானந்தாக்கிக் கப்பலை ரஷ்யாவில் இருந்து இந்தியா கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கப்பல் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டதை அடுத்து கப்பலில் இதுவரை பறந்த ரஷ்ய தேசியக் கொடி இறக்கப்பட்டு இந்தியத் தேசியக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது. (ற)

# அயல் நாட்டு விவகாரத்தில் தலையிடாது இந்தியா

## மத்திய உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே தெரிவிப்பு

புதுடில்லி, நவ.19

அயல் நாடுகளுடன் இணக்கமான சூழ்நிலையை இந்தியா விரும்புகின்றது. அவற்றின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டின் உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே.

இந்திய - பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஷிண்டே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"இந்தியா அயல்நாடுகளுடன் மோதல்கள் அற்ற இணக்கமான சூழ்நிலை நிலவுவதையே விரும்புகின்றது. அயல்நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டு அவற்றுடன் உறவை சீர்குலைப்பதற்கு இந்தியா ஒருபோதும் விரும்பாது." என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பங்களாதேஷின் உள்துறை அமைச்சர் மஹியூதீனும் கலந்து கொண்டிருந்தார். (ற)

# போர்க்குற்றங்களில் ஈடுபட்டது எகிப்திய இராணுவம்

## குற்றஞ்சாட்டுகின்றனர் பிரிட்டனைச் சேர்ந்த சட்டத்தரணிகள்

லண்டன், நவ.19

எகிப்து இராணுவம் மற்றும் அந்த நாட்டின் இடைக்கால அரசு என்பன போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளன என்று பிரிட்டனைச் சேர்ந்த சட்டத்தரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மூர்சி பதவி கவிழ்க்



கப்பட்ட பின்னர் கொலை. துன்புறுத்தல் மற்றும் மக்கள் காணாமல் போதல் போன்ற மனிதாபினமானத்துக்கு எதிரான நடவடிக்கையில் எகிப்திய இராணுவம் ஈடுபட்டது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் தாம் அங்கு மேற்கொண்ட விசாரணைகளிலேயே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்றும் குறித்த



சட்டத்தரணிகள் மேலும் கூறியுள்ளனர். அவர்கள் வெளியிட்டுள்ள முக்கிய சந்தேகநபர்களின் பட்டியலில் எகிப்து இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் படையினர் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## அமெரிக்க போர்க்கப்பலை தாக்கிய 'டிரோன்'

நியூயோர்க், நவ.19

அமெரிக்கக் கடற்படைக் கப்பல் மீது மோதிய ஆளில்லா விமானத்தால் (டிரோன்) இரு அமெரிக்கக் கடற்படையினர் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த சுமார் 300 பேர் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள கடற்பகுதியில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்போது சான்சலர்வில்லி என்றபோர்க்கப்பலில் இருந்து ஆளில்லா உளவு விமானங்களை ஏவிப் பயிற்சியில் ஈடுபட்டனர். கப்பலில் இருந்து புறப்பட்ட ஓர் ஆளில்லா உளவு விமானம் இயந்திர கோளாறால் திசை திரும்பி போர்க் கப்பலை தாக்கியது. அதனால் கப்பலில் இருந்த 2 வீரர்களுக்கு தீக்காயம் ஏற்பட்டுள்ளது. (ற)


## எகிப்து பஸ் விபத்தில் 20 பேர் சாவு

கெய்ரோ, நவ.19

எகிப்து தலைநகர் கெய்ரோவின் தென் பகுதியில் சிறிய பஸ்ஸுடன் ரயில் ஒன்று மோதியதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். ரயில் தண்டவாளத்தை பஸ் கடக்க முயன்றபோதே விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்துக் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# தீப்பற்றியது விமானம்

## 50 பேர் சாவு: ரஷ்யாவில் பயங்கரம்



மொஸ்கோ, நவ.19

ரஷ்யாவின் காசன் விமான நிலையத்தில் தரையிறங்கிய போயிங் விமானம் தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியதில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இருந்து மேற்கு ரஷ்யாவின் டாடர்ஸ்டன் மாகாண தலைநகர் காசன் நகருக்குப் பறப்பை மேற்கொண்டிருந்த போயிங் 737 ரக விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது. அந்த விமானத்தில் விமானி, விமானப் பணியாளர்கள் உட்பட 6 பேர் மற்றும் 44 பயணிகள் பயணித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.25 மணிக்கு காசன் விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தை விமானி தரையிறக்க முயற்சித்தார். எனினும் விமானத்தை தரையிறக்குவது சாத்தியமாகவில்லை என்று கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மூன்று முறை தரையிறங்குவதற்கு முயற்சித்த விமானி நான்காவது முறையாக தரையிறக்க முயற்சிக்கும் போது விமானம் தரையில் மோதித் தீப்பிடித்துக் கொண்டது.

தீப்பிடித்ததை அடுத்து விமானத்தில் இருந்த பயணிகள் தம்மைக் காப்பாற்றும்படி அலறியதை விமான நிலையத்தில் இருந்தவர்கள் கேட்டதாகக் கூறுகின்றனர். எனினும் அவர்களைக் காப்பாற்றும் முயற்சிகள் மேற்கொள்ள முன்பதாகவே விமானம் முற்றாக எரிந்து சாம்பராகியது. அதிலிருந்த அனைவரும் உயிரிழந்தனர்.

விமானத்தை தரையிறக்குவதில் ஏற்பட்ட சிக்கல் என்ன என்பது குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. அதுகுறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## மண்டேலாவால் உரையாட முடியவில்லை

கேப்டவுன், நவ.19

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவால் உரையாட முடியவில்லை என்று அவரது முன்னாள் மனைவி வின்னி மண்டேலா தெரிவித்துள்ளார்.

நுரையீரல் தொற்று காரணமாக வீட்டிலிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார் மண்டேலா.

எனினும் அவருக்குச் சிகிச்சை அளித்து வரும் மருத்துவர்கள் மண்டேலா விரைவில் உரையாடுவார் என்று தெரிவித்துள்ளனர். (ற)

## நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் சாவு

லண்டன், நவ.19

இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பிரிட்டனைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் டோரிஸ் லெஸ்ஸிங் நேற்று முன்தினம் லண்டனில் உயிரிழந்தார்.

1919ஆம் ஆண்டில் ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி பெர்ஷியா (தற்போதைய ஈரான்) நாட்டில் பிறந்த டோரிஸ் லெஸ்ஸிங், 5 வயதில் ரொடீஷியா (தற்போதைய சிம்பாப்வே) நாட்டுக்குப் பெற்றோருடன் குடிபெயர்ந்து 29 வயது வரை அங்கே வாழ்ந்தார்.

கம்யூனிச சித்தாந்தங்களில் அதிக ஈர்ப்புடைய டோரிஸ் பிரிட்டனுக்கு வந்து 1950 ஆம் ஆண்டு 'த கிராஸ் இஸ் ஸிங்கிங்' என்ற தனது முதல் நாவலை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து 'நோட்புக்' மற்றும் 'தி கிராஸ்' உட்பட 50க்கும் மேலான சிறந்த படைப்புகளை உருவாக்கியவருக்கு 2007 ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. (ற)

## தீவிரவாதிகள் நால்வர் பிரான்ஸில் கைது

பரிஸ், நவ.19

தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த நான்கு பேர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிரிய உள்நாட்டுப் போருக்கு பிரான்ஸில் இருந்து தீவிரவாதிகள் செல்கின்றனர் என்று கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிரியக் கிளர்ச்சியாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் கூறப்படுகின் றது. (ற)

## "குழந்தை இரவில் ஒரே அழுகை விற்கப் போகின்றோம் வேண்டுமா?"

### இணையத்தளத்தில் விளம்பரமிட்ட பெற்றோர்

பெர்லின், நவ.19

குழந்தையின் அழுகையைப் பொறுக்க முடியாத பெற்றோர் அதனை விற்பனை செய்வதற்கு இணையத்தளத்தில் விளம்பரமிட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசிலைச் சேர்ந்த தம்பதிகளே இவ்வாறு விளம்பரப்படுத்தியுள்ளனர்

இணையத்தளத்தில் அவர்கள் செய்துள்ள விளம்பரத்தில்,

"எங்கள் குழந்தை இரவு முழுவதும் அழுது கொண்டே இருக்கின்றது. அதை நிறுத்த எங்களால் முடியவில்லை. பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு இரவில் எம்மால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. அதனால் எமது




அலுவலகப் பணிகளில் கவனம் செலுத்த முடியவில்லை. அது எமது வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது. எனவே எமது குழந்தையை விற்க முடிவு செய்துள்ளோம். அதன் விலை ரூபா 60 ஆயிரம்" என்று கூறப்பட்டுள்ளது. அந்த விளம்பரத்துடன் ஒரு பஞ்சிளம் பாலகனின் புகைப்படமும் இணைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் பிரேஸிலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த விளம்பரம் இணையத் தளங்களில் வேகமாகப் பரவியது. அதையடுத்து விளம்பரத்தை குறித்த இணைய விளம்பர நிறுவனம் தற்போது நீக்கியுள்ளது.

இதுகுறித்து பிரேஸில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து குறித்த தம்பதியரைத் தேடி வருகின்றனர்.

இணையத்தில் பொருள்களை விற்பனை செய்வதற்காகப் பல தனியார் நிறுவனங்கள் பிரேஸிலில் செயற்பட்டு வருகின்றன.

அந்த நிறுவனங்கள் விளம்பரங்களை மட்டுப்படுத்தாது பிரசுரிப்பது குறித்து பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. (ற)

## பாதுகாப்புத் தரப்புக்கான நிதி குறைப்பு இராணுவ செயற்பாட்டுக்கு அச்சுறுத்தல்

### அமெ. பாதுகாப்பு அமைச்சர் விசனம்

நியூயோர்க், நவ.19

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி குறைக்கப்பட்டிருப்பது அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச இராணுவ செயற்பாடுகளுக்குஅச்சுறுத்தலாகஅமையும் என்று அச்சம் வெளியிட்டுள்ளார் அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் சக்ஹெறகல்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி கடந்த ஒரு தசாப்த காலத்தின் பின்னர் ஒரு டிரில்லியன் டொலர் அளவில் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை மிக ஆழமானதும் சடுதியானதுமாகும். இது பொறுப்பற்ற நடவடிக்கையாகும். இதன் மூலம் பாதுகாப்புத் தரப்பை மிக மோசமான நிலைக்கு நிர்ப்பந்திக்கின்றது. இந்த நடவடிக்கையால் ஏற்படும் தாமதத்தை சரி செய்யப் பல ஆண்டுகள் ஆகும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# அரசு விரைந்து செயற்பட்டாலே நெருக்கடியிலிருந்து தப்பலாம்

## எச்சரிக்கிறது 'டெய்லி மிரர்'

கொழும்பு. நவ.19

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற ஒன்றைச் செயற்படுத்துவதற்கு முனைவது ராஜபக்ஷ அரசுக்கு நல்லது. அடுத்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏதாகிலும் அதிகார மிக்க நாடு சுதந்திரமான சர்வதேச விசாரணையைக் கோரி தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்னராக இதனை இந்த அரசு செய்தாக வேண்டும். இவ்வாறு 'டெய்லிமிரர்' பத்திரிகை தனது நேற்றைய ஆசிரிய தலையங்கத்தில் வற்புறுத்தியுள்ளது.

கொழும்பில் நடந்த பொது நலவாய மாநாட்டில் இந்திய கனேடிய தலைவர்கள் கலந்து கொள்ளாத நிலையில் பொதுநலவாய மாநாட்டை இலங்கை மீது பழி சுமத்துவதற்கு பிரிட்டன் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டது. இந்த நிலையில் அரசு பிரச்சினைகளை உதறித் தள்ளிவிட முடியாது. அவை நியாயமாகவும் ராஜதந்திர முறையிலும் அணுகப்பட வேண்டும் என்று மிரர் தலையங்கம் குறிப்பிடுகிறது.

> "–"
> கொழும்பில் நடந்த பொது நலவாய மாநாட்டில் இந் திய கனேடிய தலைவர்கள் கலந்து கொள்ளாத நிலையில் பொதுநலவாய மாநாட்டை இலங்கை மீது பழிசுமத்துவதற்கு பிரிட் டன் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டது.

அவ்வாறு செய்யாது விடின் அதற்காக பெரிய அளவில் விலை கொடுக்க வேண்டிய நிலை இலங்கை அரசுக்கு ஏற்படும் என்று தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடியில் பொது மக்கள் சிக்கிப் போய் இருக்கிறார்கள். நாட்டின் நிதர்சனமான பிரச்சினைகளில் எதிர்க்கட்சிகளுக்கு தொடர்பே இல்லாமல் போயுள்ளது. அதேவேளை நாட்டின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர்களுக்கு சர்வதேச யதார்த்தங்களில் எந்த வித தொடர்பையும் காணோம். இந்த நிலையில் சர்வதேச பெரிய அதிகார வர்க்க 'நிகழ்ச்சி நிரல்களை நம்மால் எதிர்த்து நிற்க முடியாமல் போகலாம் என்று 'டெய்லி மிரர்' எச்சரித்துள்ளது. (ப)

# மட்டக்களப்பில் போராட்டம்



மட்டக்களப்பு.நவ.19

மட்டக்களப்பு.ஆரையம்பதி பிரதேசத்தில் உள்ள எமது காணிகளில் குடியமர சிலர் தடை விதித்து வருகின்றனர்.

தமது காணியில் குடியமரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்து மண்முனைப் பற்றில் உள்ள முஸ்லிம் மக்கள் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுத் திங்கட் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மண்முனைப் பற்று பிரதேசத்தில் உள்ள தமக்கு சொந்தமான காணிகளை பராமரிப்பதற்கு சிலர் தடைகளை ஏற்படுத்துகின்றனர் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டது. (ச)

# சிறுவர் தொடர்பான மனித உரிமைகள் செயலமர்வு

கிளிநொச்சி. நவ.19

கிளிநொச்சிமாவட்ட கிராம மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவின் மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயம் கடந்த வருடம் முதல் கிளிநொச்சி மாவட்டத்திலும் உப அலுவலகம் ஒன்றை திறந்து தனது சேவையை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட சிறுவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆணைக்குழு மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது. இது தொடர்பான செயலமர்வே சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-5)


**மு/புதுக்குடியிருப்பு, பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ/து)**

**அறிவித்தல்**

சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 30.11.2013 திகதியுடன் மூடப்பட இருப்பதால் சங்கத்தின் அங்கத்தவர்களாக கடந்த காலத்தில் இருந்து இன்றுவரை தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தாதவர்கள் 2013.11.25 ஆம் திகதிக்கு முன்னதாக சங்கத் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன், ஏற்கனவே உள்ள கிளை ரீதியான பட்டியல்களைக் கிளைகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

சங்கத்தின் பழைய அங்கத்தவர்கள் பட்டியலில் இல்லாதவர்கள் தாம் பழைய அங்கத்தவர் என்பதை சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தி வழங்குவதுடன், பங்குப்பணம் ரூபா 100/=வினையும் செலுத்த வேண்டும் என்பதனை தங்களின் தயவான கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

2013.11.14ஆம் திகதிய இயக்குநர் சபைக் கூட்டத்தில் 2013/90 ஆம் இலக்கத் தீர்மானக் கட்டளைப்படி.

2013.11.15 றொ.சாந்தி, செயலாளர்,
நிநி (சி/1924) (12.3.6) புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ/து)



**'அற்லான்ரா' வைத்தியசாலை-மருதனார்மடம்**
**விசேட வைத்திய நிபுணர் சேவை**

மகப்பேற்று வைத்திய நிபுணர்களான
01. Dr.A.ஸ்ரீதரன், பிரதி வியாழக்கிழமை தோறும் மாலை 6.30 மணிக்கும்
02. Dr.K.சுரேஷ்குமார் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 5.30 மணிக்கும் நோயாளரைப் பார்வையிடுவர்.

தொடர்பு:021 224 2299 (40098)(4.6.3) நிர்வாகி.



**விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**

**அறிவித்தல்**

சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 30.11.2013 ஆம் திகதியுடன் மூடப்பட இருப்பதால் சங்கத்தின் அங்கத்தவர்களாக கடந்த காலத்தில் இருந்து இன்றுவரை தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தாதவர்கள் 29.11.2013 ஆம் திகதிக்கு முன்னதாக சங்க தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன், ஏற்கனவே உள்ள கிளை ரீதியான பட்டியல்களை கிளைகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

சங்கத்தின் பழைய அங்கத்தவர்கள் பட்டியலில் இல்லாதவர்கள் தாம் பழைய அங்கத்தவர் என்பதை சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தி வழங்குவதுடன், பங்குப்பணம் ரூபா 100.00 இனையும் செலுத்த வேண்டுமென்பதனை தங்களின் தயவான கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

16.11.2013 ஆம் திகதிய இயக்குநர் சபைக் கூட்டத்தில் 12/2013 ஆம் இலக்க தீர்மானக் கட்டளைப்படி

செயலாளர் (சி/14923)(3.6.4)
விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்



**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி பெரிய அரசடி ஆசிரியர் வீதியில் 3 பரப்பு, 2¾ பரப்புக் காணிகள் (இந்துக் கல்லூரிக்கு அருகில்) விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 876 8738 (33005) (7.6.3)



**"அற்லான்ரா" வைத்தியசாலை மருதனார்மடம்**
**தேவை ஓய்வுபெற்ற தலைமைத் தாதி**

மேற்படி வைத்தியசாலையில் தாதியர் பயிற்சி வகுப்புகளைப் பொறுப்பேற்று நடத்தவல்ல ஓய்வுபெற்ற தலைமைத் தாதி ஒருவர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு : தொலைபேசி இல: 077 371 5670

முக்கிய குறிப்பு : பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும் மேற்படி வகுப்பில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

இலவசம்

T.P : 021 224 2299 (40099) (7.6.3) நிர்வாகி



**வாடகைக்கு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மையில் தெல்லிப்பழை மெயின் வீதி முகப்பு, சாப்பாடு, சமையல், இணைந்த குளியலறையுடன் மேலும் நான்கு அறை வசதியான வீடு. குடும்பத்திற்கு உடனடி வாடகைக்கு உண்டு.

தொடர்பு
0773 753 094
0772 035 419



**23.11.2013 முதல் ஆரம்பமாகின்றது**

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் III ஆம் வகுப்பிற்கு நியமனம் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தயார்ப்படுத்தல் வகுப்புகள்

நவம்பர் 23 முதல் பிரதி சனி, ஞாயிறு தினங்களில்
வளவாளர்:எஸ்.சிவநேசன் ஓய்வு நிலை உதவி விவசாயப் பணிப்பாளர்

தொடர்புகளுக்கு : பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
தொழில்முறை மற்றும் பட்டப் படிப்பகம்
SCHOOL OF PROFESSIONAL AND DEGREE STUDIES (PVT) Ltd.
65, AMMAN ROAD, KANTHARMADAM, JAFFNA.
Phone : 021 221 9793, Hot Line : 077 177 7061 (40247) (4.6.3)



**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கும் கண்டி வீதிக்கும் அருகில் 70 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (40241)(4.6.3)

தொடர்பு: 077 132 8591/077 754 9803



**நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டி விற்பன்னக்குண்டு. (40246) (12.3.6)

தொடர்பு: 077 691 3160



**TVகள் மலிவு விற்பனை**

எங்குமே கிடைக்காத மலிவு விலையில்
SONY Wega TVகள் 21"-14500/=
Sony, Panasonic 29"-16000/= DVD-3000/=
Box, அம்பிளிபயர் என்பன
தொடர்பு: 077 044 0570
சேவி ரேட்சென்ரர் (கோவிஷ் எக்ஸ்போர்ட்ஸ்)
(30775)(7.6.3) 56, கே.கே.எஸ் வீதி, நல்லைமர்.



**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மேற்படி மாணவர்களோடு

**100புள்ளிகளுக்கு மேல் பெற்ற**

| | | | |
|---|---|---|---|
| செ.யதுர்சன் | – 149 | ஜெ.நர்மதன் | – 141 |
| ப.தனுயன் | – 129 | ஈ.வரோதயன் | – 124 |
| யோ.இந்துஜன் | – 119 | செ.நிருஜா | – 104 |

ஆகிய மாணவர்களையும், வழிகாட்டிய வகுப்பாசிரியரையும் பாராட்டி வாழ்த்துகிறோம் (40245) (12.6.3)

பாடசாலைச் சமூகம், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.

# எம்மிடம் இருந்து பறித்ததை எமக்குப் பெற்றுத் தாருங்கள்

## அமைச்சரிடம் கேப்பாபிலவு மக்கள் பிரதிநிதி மன்றாட்டம்

முல்லைத்தீவு, நவ. 19

எமக்கு விவசாயம் செய்வதற்கு நிலமில்லை, எமது சொந்த இடத்தில் குடியமர முடியவில்லை, கால் நடைகளை இராணுவம் பிடித்து வைத்திருக்கின்றது. இவற்றை வடமாகாண சபை அரசு மூலம் பெற்றுத் தாருங்கள். இவ்வாறு கேப்பாபிலவு கிராம கமக்கார அமைப்புப் பிரதிநிதியொருவர் கண்ணீர் மல்க அமைச்சர் பொ. ஐங்கரநேசனிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மீள்குடியமர்வு என்ற போர்வையில் எமது பரம்பரை வழிவந்த குடியிருந்த காணிகளை விடுத்து கால் ஏக்கர் காணியை வழங்கி வேறு இடங்களில் குடியமர்த்தியுள்ளனர். ஆனால் எமக்கு எந்தவித வசதிகளும்செய்துதரப்படவில்லை. எதுவுமற்று நிர்க்கதிக்குள்ளாகியுள்ளோம். எமது வயல் நிலங்களை இராணுவம் பிடித்து வைத்திருக்கின்றது. எமது கால்நடைகளை அவர்கள் பிடித்து பால் எடுப்பதுடன் இறைச்சிக்காகவும் வெட்டுகின்றனர். நாம் எமது விவசாயத்தை மேற்கொள்ள முடியாமலும் பால், தயிர் ஆகியவற்றைப் பெற முடியாமலும் தென்னை மரங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தை இழந்தும் அல்லற்படுகின்றோம். எமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதற்கு கால் ஏக்கரைத் தவிர வேறு எந்தவித வழியுமின்றித் தவிக்கிறோம். எனவே, எமது காணிகள், இல்லங்கள், எமது கால்நடைகள் ஆகியவற்றைமீட்டுத்தாருங்கள் என கண்ணீர் மல்க மிகவும்ஆவேசமாக அமைச்சரிடம் அந்தப் பிரதிநிதி தெரிவித்தார். (க-500)

## அமைச்சர் ஆறுமுகன் மன்னாருக்கு வருகை



அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கடந்த சனிக்கிழமை மாலை திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டு மன்னாருக்கு வருகை தந்தார்.

அவர் தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ மூத்துமாரி அம்மன் ஆலயத்துக்குச் சென்று அந்தப் பகுதியில் உள்ள இந்திய வம்சாவழி மக்களையும், ஆலயப் பரிபாலன சபையினரையும் சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து தலைமன்னார் துறைமுகத்தில் உள்ள கடற்படை முகாமுக்குச் சென்ற அமைச்சர் கடற்படையினருடன் உரையாடல்களை மேற்கொண்டார். (க-12)



உலக தரிசனம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச செயலகமும், சிறுவர் பெண்கள் பிரிவும் இணைந்து நடத்திய மௌன கலந்து கொண்ட சிறுவர்கள், பெண்கள். (க)

## மிக மோசமான கோரக்கன்கட்டு குடியிருப்பு வீதி

கிளிநொச்சி கோரக்கன்கட்டு குடியிருப்புக்குச் செல்லும் பிரதான வீதியைப் புனரமைத்து வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி-கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ளது கோரக்கன்கட்டு குடியிருப்பு.

இந்தப் பகுதியில் தற்போது 340க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆனால் இந்தக் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள மக்கள் இதனூடாகப் பயணிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக இந்த வீதியில் காணப்படும் குழிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதைக்காண முடிகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் 340 குடும்பங்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றன. பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் நிலை தற்போது காணப்படுகின்றது.

இந்த வீதியின் அவலநிலை தொடர்பாக மனு ஒன்றை அதிகாரிகளுக்கும் வடமாகாண சபை உறுப்பினர்களுக்கும் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கோரக்கன்கட்டு கிராம அமைப்புக்கள் தெரிவித் துள்ளன. (க-6)

## வவுனியா நகரசபையின் வரவு-செலவுத் திட்டம் குறித்து கலந்துரையாடல்

வவுனியா, நவ.19

வவுனியா நகரசபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபைச் செயலாளர் தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டன. வவுனியா நகரசபைக்குட்பட்ட பல வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாமை, வடிகால்கள் புனரமைக்கப்படாமை, வீதிகளில்மின்விளக்குகள்பொருத்தப்படாமை, வவுனியா பூந்தோட்டம் மின்சார மயானம் இன்னமும் பயன்பாட்டுக்கு விடப்படாமை, வவுனியா நகரசபைக்குச் சொந்தமான காணிகள் உரிய வகையில் பராமரிக்கப்படாமை உட்படப் பல்வேறு குறைபாடுகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டன.

இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் வவுனியா நகரசபை எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பாகவும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

பொதுமக்களால் பெருமளவு ஆதனவரி நிலுவைகள் செலுத்தப்படவேண்டியுள்ளன. அவை செலுத்தப்படுமாயின் அபிவிருத்திப் பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள முடியும். பூந்தோட்டம் இந்து மின்சார மயானத்தைப் பரீட்சித்துப் பார்த்த பின்னர் பாவனைக்கு விடப்படும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், ஆதன வரியை வசூலிக்கும் பொருட்டு நடமாடும் சேவைகள் நடத்தப்படுமெனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (க-402)

## காணி தொடர்பான கூட்டம்

துணுக்காய் பிரதேச செயலகத்தில் காணிப் பயன்பாடு தொடர்பான கூட்டம் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றது. பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பொதுத் தேவைகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு காணி அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டது. மீளக் குடியமர்வின் பின்னர் காணி தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதில் பிரதேச செயலகம் பெரும் முயற்சி மேற்கொண்டு வருவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது. போர்க் காலத்தில் காணி ஆவணங்களைத் தொலைத்த மக்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன எனவும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (க-18)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவை இனங்காணல் அவசியம்

### கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

பொது மக்களது வாழ்வாதாரத் தேவைகளைச் சரியாக இனம் கண்டு கண்காணிப்பதன் மூலமாக அவற்றை வலுப்படுத்த முடியும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சமூகமட்ட அமைப்புக்களின் இயல்பு விருத்தியைக் கட்டியெழுப்புதல் என்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

'அக்ரெட்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்த சகல துறைசார்ந்த மக்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுத் தற்போது தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் எமது மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான அமைப்புக்களுக்கு சிறுகடன் திட்டங்கள், வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்பட்ட போதும் முறையாகக் கண்காணிக்கப்படாததால் உரிய பயன்கள் கிடைக்கவில்லை.

எனவே, வாழ்வாதாரத் தேவைகள் உரிய வகையில் இனம் காணப்பட்டுக் கண்காணிக்கப்படுவதன் மூல மாக அவற்றை வலுப்படுத்த முடியும். உரிய வளங்கள் இன்மையால் சில அமைப்புக்கள் சீராக இயங்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

## மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை 5 வயதில் ஆரம்பிக்க வேண்டும்

### கூறுகிறார் வடக்கு சுகாதார அமைச்சர்

மாணவர்களை ஐந்து வயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்த பெற்றோர் அக்கறை காட்ட வேண் டும். இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். வவுனியா பாரதி முன்பள்ளியின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபை மண் டபத்தில் இடம்பெற்ற பாரதி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்;

பரீட்சையை நோக்கமாகக் கொண்டு அரசின் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தற்போது மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து காணப்படுகிறது. வவுனியாவைப் பொறுத்த வரையில் சகல வசதிகளும் கொண்ட பொது நூலகம் சிறப்பாக இயங்கி வருவதுடன் குழந்தைகளுக்கெனத் தனியான பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த நூலகத்தைப் பயன்படுத்தும் மாணவர்களின் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. பாடங்கள் தொடர்பான சிறு குறிப்புக்கள் அடங்கிய புத்தகங்கள் வியாபார நோக்கில் அதிகம் வெளிவருவதால் வாசிக்கும் பழக்கம் அருகி வருகின்றது. இந்த நிலை மாற வேண்டும். மூன்று தசாப்த காலமாக கடந்து சிறுவர்களுக்குப் போதித்து வரும் பாரதி முன் பள்ளியின் பொறுப்பாசிரியரின் சேவைகளைப் பாராட்டுகின்றேன்- என்று தெரிவித்தார். (க-402)

## கட்டுத் துவக்கால் மாட்டைச் சுட்டவர் தலைமறைவு

ஏறாவூர்,நவ.19

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள முந்தன்குமார வெளி பிரதேசத்தில் வைத்து பசுமாடொன்றை கட்டுத் துவக்கால் சுட்ட நபர் தலைமறைவாகியுள்ளார். இந்தச் சந்தேக நபரைத் தேடி வருவதாக கரடியனாறு பொலீஸார் தெரிவித்தனர்.

பசுமாட்டை துவக்கால் சுட்ட சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது என்று கரடியனாறு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தனது பசுமாடு கட்டுத் துவக்கு வைத்திருந்த ஒருவரால் சுடப்பட்டது என்று மாட்டின் உரிமையாளர் கரடியனாறு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் தாம் சந்தேகநபரைத் தேடிவருவதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மாதம் ஒன்றுக்கு ரூ.375 சம்பளம்

அம்பாறை, நவ.19

வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்லும் இன்றைய காலகட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 375 ரூபா சம்பளம் பெறும் அரச ஊழியர்களும் நாட்டில் வாழ்கின்றனர்.

மட்டக்களப்பு, மண்டூர் வைத்தியசாலையில் காவலாளிகளாகக் கடமையாற்றி வரும் இருவர் பல வருடக்கணக்கில் ஒருவருக்கு 375 ரூபா என்ற அடிப்படையிலே மாதச் சம்பளத்தைப் பெற்று வருகின்றனர். இவர்களில் ஒருவர் பகல் நேர காவலாளியாகவும், மற்றவர் இரவு நேரக் காவலாளியாகவும் கடமைபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் இருவரும் தங்களைநிரந்தரமாக்கக்கோரி பலமுறை சுகாதார உயர் அதிகாரிகளிடமும், அரச அமைச்சர்களிடமும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களிடமும் பல தடவைகள் முறையிட்டும், இதுவரைக்கும் எந்த விதமான பலனும் கிடைக்க வில்லைஎன்று கூறுகின்றனர். (ச-31)

### திருட்டு, கொள்ளைகளை தடுத்து நிறுத்துமாறு கோரி

# நிந்தவூரில் ஹர்த்தால்

### போக்குவரத்துக்கள் தடைப்பட்டன; பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிலையங்களை மூடி, வீதிகளில் ரயர்கள் எரிப்பு









அம்பாறை, நவ.19

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் திருட்டுக்கள், அசம்பாவிதங்கள் ஆகியவற்றைத் தடுக்கக்கோரி சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த நிந்தவூரில் நேற்று திங்கட்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நிந்தவூரில் உள்ள பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. நிந்தவூர் பிரதான வீதியில் போக்குவரத்துக்களும் முற்றாகத் தடை செய்யப்பட்டன. அத்துடன் வீதியில் ரயர்கள், மரக்கட்டைகள் போட்டு எரிக்கப்பட்டும் வீதிகளுக்கு குறுக்கே தடைகளும் போடப்பட்டன. அதனால் கல்முனை - அக்கரைப்பற்று போக்குவரத்துச் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

முன்னொரு தடவை கிழக்கு மாகாணத்தில் தமிழ்- முஸ்லிம் பிரதேசங்களில் 'கிறிஸ் பூதர்' சாயலில் மக்களை அச்சுறுத்தியிருந்த சம்பவங்களைப் போன்று, கடந்த இரு வாரகாலமாக பல சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்று திங்கட்கிழமை நிந்தவூர் கடற்கரைப் பகுதியில் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த நான்கு பேர் வந்து 'கிறிஸ் பூதம்' போன்று தங்களை மாற்றுவதற்காக மீனவர் வாடி ஒன்றுக்குள் உடைகளை மாற்றிக் கொண்டிருந்தனர். அவ்வேளை பொது மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு அவர்களை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அப்போது சம்பந்தப்பட்டோர் தாம் கொண்டு சென்ற துப்பாக்கிகளால் சரமாரியாக சுமார் ஒன்றரை மணித்தியாலங்களாகச் சுட்டு அட்டகாசம் புரிந்துள்ளனர். அதனால் பொதுமக்கள் சிலருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த பகுதிக்கு வந்த விசேட அதிரடிப் படையினர் சம்பந்தப்பட்ட நால்வரையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தை நீக்குமாறு கோரியும் கிழக்கில் நடைபெறும் திருட்டுக்களை தடுக்குமாறு வேண்டியும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை இந்தச் சம்பவத்துடன் விசேட அதிரடிப் படையினர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று தெரிய வந்துள்ளது. (ச-30)

## சுண்ணாம்பு சுடும் இடத்தை மாற்றுமாறு கோரவில்லை

### பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.19

சுண்ணாம்புச் சூழையை வேறு இடத்துக்கு மாற்றுமாறு பிரதேச சபையால் கோரிக்கை விடுக்கப்படவில்லை என்ற மண்முனைப்பற்று பிரதேச சபையின் செயலர் திருமதி ஜெ.ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட கோவில்குளம் பகுதியில் பிரதான வீதியின் அருகே சுண்ணாம்பு சுடும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுகைத்தொழிலாளர்கள் அவர்களது தொழில் நடவடிக்கைகளை வேறுஇடத்தில் மேற்கொள்ளுமாறு பிரதேச சபையால் அறுவுறுத்தல் வழங் கப்பட்டுள்ளனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

இந்தச் செய்தியில் உண்மையில்லை. இவ்வாறான



தொருதீர்மானத்தை எமது பிரதேச சபை எடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். (ச-32)

## தமிழர்கள் இரண்டாம்தர பிரஜைகள் இல்லை

### கருணாகரம் கூறுகிறார்

மட்டக்களப்பு,நவ.19

நாட்டில் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர் என்பதனை நாங்கள் நிரூபித் துக்காட்ட வேண்டும். அதற்குத் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விவாதப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு, செட்டிப்பாளையம் மகா வித்தியாலயத்தின் விபுலானந்தா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுடன் ஒட்டியிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் இன்று அபிவிருத்தி குறித்துக் பேசுகின்றனர் அபிவிருத்தி என்பது என்ன? அபிவிருத்தி என்பது வீதிகள் போடுவதோ, கட்டடங்கள்



கட்டுவதோ அல்ல. வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களை உயர் நிலைப் படுத்துவதுதான் அபிவிருத்தியாகும். -என்றார். (ச-32)

## ஆலயங்களில் திருடி வந்த இருவர் கைது

மட்டக்களப்பு, கல்குடா பொலிஸ் பிரிவில் நீண்டகாலமாக பல்வேறு திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இரண்டு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து பெறுமதி வாய்ந்த திருட்டுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தர்மிக நவரத்ன தெரிவித்தார்.

இரவு நேரக் காவல் கடமையில் ஈடுபட்டு வந்த பொலிஸார் விநாயகபுரம், வாழைச்சேனை பகுதியில் இந்த நபர்களை கைது செய்துள்ளனர். (ச)

# வெளிநபர்களின் சவால்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டோம்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க சூளுரை



கடந்தகால யுத்தம் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கையிடம் உள்ளக பொறிமுறையொன்று இருக்கின்றது. எனவே, வெளிநபர்களின் அழுத்தங்களைக் கவனத்திற்கொள்ள மாட்டோம். அவ்வாறான சவால்களுக்கு ஒரு போதும் அடிபணிய மாட்டோம்.

இவ்வாறு அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுநலவாய அமைப்பின் ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கை எந்தவொரு நாட்டினதும் காலனித்துவ ஆட்சியின் கீழ் இல்லை. இது சுதந்திரமானதொரு நாடு. 1948 ஆம் ஆண்டு முதல் இந்த நாடு சுதந்திரத்தை அனுபவிக்கின்றது. நாட்டில் அரசமைப்பொன்று உள்ளது. அந்த அரசமைப்புக்கு அமைவாக இந்த நாடு வழிநடத்தப்படுகின்றது.

எமது நாட்டில் சட்டங்கள் உள்ளன. காலக்கெடு மற்றும் நேரசூசி வழங்கும் எந்தவொரு சர்வாதிகார நடவடிக்கையின் கீழும் நாம் இல்லை. எம்மிடம் உள்ளக பொறிமுறையொன்று உள்ளது. கடந்தகால போர்ச் சூழ்நிலையில் நாம் எதிர்கொண்ட சவால்களுக்கு முகங்கொடுக்க இந்தப் பொறிமுறை உதவியது.

நாம் நல்லிணக்கத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். கடந்த நான்காண்டுகளில் நாம் பெற்றுக்கொண்ட விடயங்கள் தொடர்பில் பெருமையடைகின்றோம். எதிர்கொள்ளவுள்ள சவால்களை வெற்றிகொள்ள சிறப்பாகச் செயற்படுவோம். நாம் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். சிறந்த நல்லிணக்கத்தை நோக்கி நாம் பயணிக்கின்றோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

வெளிநபர்களை விட எமது மக்களை நாம் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளோம். அவர்களை விட எமக்கே எமது மக்கள் தொடர்பில் அதிக அக்கறை உள்ளது" - என்றார்.

## மூடப்பட்ட பாடசாலைகள் நாளை திறக்கப்படும்

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டிற்காக மூடப்பட்ட 35 பாடசாலைகளும் நாளை புதன்கிழமை மீண்டும் திறக்கப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

35 பாடசாலைகளும் நவம்பர் 6 ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வதிவிடப் பயிற்சி

'நாளைய தொழிற்சங்க தலைவர்களுக்கான இன்றைய பயிற்சி' என்ற தொனிப் பொருளில் நடத்தப்படவுள்ள நான்கு வார வதிவிடப் பயிற்சி நெறியின் முதலாம் கட்டப் பயிற்சி இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தேசியதொழிற்சங்கசம்மேளனம் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அனுசரணையுடன் நடைபெறும் இப் பயிற்சி நெறி கொழும்பு - ஜானகி ஹோட்டலில் முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகும்.

இளம் தொழிற்சங்கவாதிகள் கலந்துக்கொள்ளும் 5 நாள்கள் முதல்கட்ட வதிவிட பயிற்சி நெறியில் 8 தொழிற்சங்கங்களிலிருந்து 30 பங்குபற்றுநர்கள் கலந்துக்கொள்வர். இவர்கள் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், ஸ்ரீ லங்கா சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம், தேசிய ஊழியர்கள் சங்கம், தேசிய தோட்ட சேவையாளர் சங்கம், தேசிய சுகாதார பொது சேவையாளர் சங்கம், புலம்பெயர் தொழிலாளர் முன்னணி, பொது சேவை தேசிய தொழிலாளர் சம்மேளனம், தேசிய ஆசிரியர் சங்கம் ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இப்பயிற்சிநெறியை தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் கே. வேலாயுதம் நெறிப்படுத்தவுள்ளார்.

## கடலில் மூழ்கி சிறுவன் மாயம்



மோதரை - காக்கைதீவு கடலில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - 15 பர்கியூசன் வீதியைச் சேர்ந்த மொஹமட் அஸ்ரப் அலி என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகிறன்றன.

மோதரை பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மூளை வளர்ச்சி குன்றிய அமைச்சர்கள் பதவியில்

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



இலங்கையில் மூளை வளர்ச்சி குன்றிய அமைச்சர்கள் பதவி வகித்து வருகின்றனர் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 95 வீதமானவர்கள் மூன்று வேளை உணவு உட்கொள்ள முடியாத வறுமையில் வாடுகின்றனர்.

இலங்கை ஆசியாவின் ஆச்சரியம் என்பது இன்று, ஆசியாவின் நரகமாக மாறி வருகின்றது.

நாட்டில் அதிவேக வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 90 வீதமான மக்களினால் இந்த வீதிகளில் பிரவேசிக்க முடியாது.

நாட்டில் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் தலைவரின் சகோதரர் கட்டுநாயக்க அதி வேக வீதியின் குறைபாடுகள் என்ன என கேள்வி எழுப்பு கின்றார்.

ஒரு பிரச்சினையும் இல்லை. எனினும், ஒரு கிலோ மீற்றருக்கு 1400 மில்லியன் ரூபா வேறு எங்கும் செலவிடப்படவில்லை.

அமெரிக்கா ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக 300 - 400 பேர் மட்டுமே கடமையில் ஈடுபடுகின்றனர். எனினும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இலங்கை ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகும்.

ஏனெனில் இவர் மக்களின் மத்தியில் செல்ல அஞ்சுகின்றார். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு வருடத்தில் 500 கைத்தொழிற்சாலைகள் மற்றும் 200 ஆடைக்கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்காக அரசு சூதாட்ட மையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

அமைச்சர்கள் சிலர் பாலியல் தொழிலை சட்ட ரீதியாக்குமாறும், கசிப்பு வர்த்தகத்தை சட்ட ரீதியாக்குமாறும் கோருகின்றனர். இந்த நாட்டில் மூளை வளர்ச்சி குன்றிய அமைச்சர்களே பதவி வகிக்கின்றனர் - என்றார்.

## மாநாட்டின்போது பணியிலிருந்த பொலிஸாருக்கு விடுமுறை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



பொதுநலவாய உச்சி மாநாட்டுக்காக பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 3 நாள்கள் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் 23 ஆவது பொதுநலவாய மாநாடு நடைபெற்ற காலத்தில் இவர்கள் ஆற்றிய விசேட பணிக்காக இந்த விடுமுறை வழங்கப்படுகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட பணிகளில் 20 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 68ஆவது பிறந்த தின நிகழ்வை நேற்றுக் காலை தனது பாரியார், பிள்ளைகள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் கேக் வெட்டிக்கொண்டாடினார்.

# நம்பியார் முல்லைத்தீவு சென்றிருந்தால் தப்பியிருப்பார் பிரபாகரன்

## கோத்தபாய கூறுகின்றார்



ஐக்கிய நாடுகளின் அதிகாரி விஜய் நம்பியாரை முல்லைத்தீவுக்கு அனுமதித்திருந்தால் பிரபாகரன் தப்பியிருப்பார் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரன், போர் நிறுத்தம் ஒன்றுக்கு தயாரான போதும் ஆயுதங்களைக் கீழே வைக்க உடன்படவில்லை. இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் அதிகாரி விஜய் நம்பியார் போர் நிறுத்தம் ஒன்றின் நிமித்தம் இலங்கைக்கு வந்தார்.

எனினும், பிரபாகரனுக்கு போர் நிறுத்த வாய்ப்பை கொடுத்தால் அவர் மீண்டும் போருக்குத் தயாராவார் என்ற அடிப்படையில் அதற்கு இடம் தரப்படவில்லை.

எனவே விஜய் நம்பியார் முல்லைத்தீவுக்கு அனுமதிக்கப் படவில்லை - என்றார்.

## ஓட்டோவில் ஹெரோயின் கடத்திய இருவர் மாட்டினர்

ஓட்டோவில் 40 பைக்கற் ஹெரோயின் கடத்திய இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஸ்கம பொலிஸ் பிரிவில் கொழும்பு - அவிசாவளை பிரதான வீதியில் புதிய அம்பலம் பகுதியில் வைத்து ஓட்டோ ஒன்றைப் பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

அதன்போது ஓட்டோவில் பயணித்த இருவரிடம் இருந்து 2 கிராம் 945 மில்லிகிராம் நிறையுடைய தலா 15, 25 பைக்கற் ஹெரோயின்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் கொஸ்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டின் நலன்களைப் பிரதிபலிக்காத மாநாடுகளால் மக்களுக்கு மிஞ்சுவது என்ன...?

பொதுநலவாய நாடுகளில் நிரந்தரமான, சமத்துவமான அபிவிருத்தியை அடைவதனை பிரதான நோக்காகக் கொண்டு உழைப்பது என்ற பிரகடனத்துடன், கொழும்பில் நடைபெற்ற உச்சி மாநாடு முடிவுற்றுள்ளது.

வறுமை, உணவுப் பாதுகாப்பு, காலநிலை மாறுபடுதலைத் தணித்தல், வர்த்தகத்துறையில் நிலவும் பற்றாக்குறைகளை குறைப்பதற்கு உறுதிப்படுத்துவதை நாடிச் செயலாற்றுதல், தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் துறைகளில் உண்டாகும் முன்னேற்றங்களை அங்கத்துவ நாடுகள் தமக்கிடையே பரிவர்த்தனை செய்து பகிர்ந்துகொள்ளுதல், பொருளாதார மற்றும் வர்த்தக முறைமைகளை சமத்துவமாக உயர்த்துதல் ஆகியவற்றைப் பிரதானமான அம்சங்களாகக் கொண்டு-

அதன் பொருட்டு அனைத்துலக மட்டத்தில் அவற்றை மேம்படுத்துவதற்கான பணிகளைச் செயற்படுத்த கூட்டாகச் செயற்படுதல் - என்பதே பிரகடனத்தின் உள்ளார்ந்த கருமை படர்ந்த கருப்பொருள்கள் ஆகும்.

மேலும், உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றிச் சமன்பாட்டை உருவாக்குவதற்கு கூட்டாக உழைக்க வேண்டும் என்றும் -

அதனை நாடி, கடந்த டிசெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட சாசனத்தைக் கடைப்பிடிப்பது என்றும், அதற்கு முன்னுரிமை வழங்குவதாகவும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவை, நாடுகள் பல சேர்ந்து ஒன்றுகூடி, நடத்தும் மாநாடுகளின் இறுதியில் சம்பிரதாய பூர்வமாக வெளிப்படுத்தப்படும் கவர்ச்சிக் கருத்துக்களின் கூட்டுக் குழம்பு எனக் கொள்ளப்படவேண்டிய வகையறாக்கள் என்பதனை விட வேறு விசேட தாற்பரியம் கொண்டவை அல்ல.

அதற்கு மாற்றீடாக-

**இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளைக் கண்டித்து கொழும்பில் வைத்தே தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும் என்று -**

**கனேடிய வெளிவிவகார அமைச்சின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான செயலாளர் தீபக் ஒபராய் கருத்து வெளியிட்டமை குறிப்பிட்டுப் பதிவு செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.**

**இதேவேளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொதுநலவாய அமைப்பின் செயலாளரும், இந்தியாவைச் சேர்ந்தவருமான கமலேஷ் சர்மா தெரிவித்த யதார்த்தத்துக்கு ஒவ்வாத கருத்தையும் கனேடிய நாடாளுமன்றச் செயலர் சாடியமை மாநாட்டின் முரண்பாடு நிலைகளை வெளிப்படுத்துவதாக அமைந்தன.**

எமது நாட்டில், சட்டம் ஒழுங்கு, நல்லாட்சி, ஜனநாயகம் என்பனவற்றில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் மாநாட்டில் ஊன்றி வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில் தெளிவான, வரவேற்கத்தக்க, போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டு மாநாட்டுக்குப் புறம்பான சந்திப்புகளில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன.

மனித உரிமை விவகாரங்கள் விடயத்தில் இந்த நாட்டு அரசினால் இதுவரை "அழகுபடுத்தும்" நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர்கள் கிண்டல் செய்துள்ளனர்.

அவற்றை இலங்கை அரசு காதில் போட்டுக்கொள்ளுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று கூற வேண்டிய நிலையே உயர்ந்து நிற்கிறது.

வடக்கில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு அப்பால், அவர்கள் மீது கொலைகளையும் தாக்குதல்களையும் நிகழ்த்தியோரை கைது செய்வதற்கோ-

அன்றி மக்களைப் பாதுகாப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை -

அதனூடாக, பொதுநலவாயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உண்மையான பெறுபேறுகளை இலங்கையில் காணமுடியவில்லை என்பதற்கு இத்தகைய நிகழ்வுகள் சான்று பகர்கின்றன என்பதும் கனேடியப் பிரதிநிதியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தத்தில் வடபுலத்தைப் பொறுத்த வரையில் அங்கு ஜனநாயகம், சட்டவாட்சி, ஊடகசுதந்திரம், மத சுதந்திரம் ஆகியன சீர்கெட்டுப் போயுள்ளதனைத் தன்னால் தெளிவாக அவதானிக்க முடிந்தது என்று கனேடியப் பிரதிநிதி தீபக் ஒபராய் தெரிவித்தமை ஊன்றிப் பதியப்பட வேண்டியதாகும்.

ஜனநாயகத்தை அதற்குரிய வடிவில் பயன்படுத்தி, அதனூடாக மக்களின் உரிமைகளையும் நலன்களையும் வழங்குவதாகக் காட்டிக்கொள்ளும் பொய்மைப் போக்கே இந்நாட்டில் மேலோங்கி நிற்கிறது என்பதனை கொழும்பு மாநாடு வெட்ட வெளிச்சமாக்கி உள்ளது.

இனியேனும் இந் நிலையைப் போக்க எமது நாட்டு அரசு மனம் கொள்ளக் கூடாதா.....?

# இரண்டும் கெட்டான் நிலை



இலங்கைத் தலைநகர் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. கனடா, மொரீஷியஸ் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் கலந்துகொள்ள வில்லை.

இலங்கையில் நடந்த இனப்படுகொலையையும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த போரின்போது அரங்கேற்றப்பட்ட மனித உரிமை மீறலையும் கண்டித்து, அதற்காக பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதாக வெளிப்படையாகவே அறிவித்தனர் கனடா, மொரீஷியஸ் பிரதமர்கள். இந்தியப் பிரதமர் அப்படி அறிக்கை எதுவுமே வெளியிடாமல், தனக்குப் பதிலாக வெளியுறவுத் துறை அமைச்சரைப் பங்கேற்க அனுப்பி வைத்து, தமிழக அரசியல் கட்சிகளுக்குத் தலையையும், இலங்கை அரசுக்கு வாலையும் காட்டி நழுவி இருக்கிறார்.

### இந்தியப் பிரதமருக்கு துணிச்சலில்லை

ஒன்று, புறக்கணித்த ஏனைய இரண்டு பிரதமர்களையும்போல, துணிவுடன் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்குக் கண்டனம் தெரிவித்து, சர்வதேச விசாரணை கோரியிருக்க வேண்டும். அல்லது, உள்நாட்டு எதிர்ப்பையும் மீறி, இலங்கைக்குச் சென்றிருக்க வேண்டும். பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனைப் போல, யாழ்ப்பாணம் சென்று, அங்கேயுள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, கொழும்பில் நடந்த பொது நலவாய மாநாட்டிலும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்‌ஷவிடம் நேரிலும் பிரச்சினைகளை எழுப்பி, அதை விவாதப் பொருளாக்கி இருக்க வேண்டும்.

தமிழக அரசியல் கட்சிகள் கூறுவதைப் போல, இந்தியா ஒட்டுமொத்தமாக இலங்கையைப் புறக்கணித்துவிட முடியாது; கூடாது. இந்தியாவின் பல்லாயிரம் கோடி ரூபாய் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக இலங்கை அரசிடம் தரப்பட்டிருக்கும் நிலையில், அந்தப் பணம் முறையாக நம்மவர்களுக்காகச் செலவிடப்படுகிறதா அல்லது தென்னிலங்கையை வளப்படுத்த பயன்படுத்தப்படுகிறதா? என்பதைக் கண்காணிக்க வேண்டிய கடமை பிரதமருக்கு உண்டு. வடக்கு மாகாணத்தில் மாகாண சபை முதலமைச்சராகப் புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் விக்னேஸ்வரன் அரசின் முதல் விருந்தாளியாக பிரதமர் மன்மோகன் சிங் போயிருந்தால், அதில் தவறு காண எதுவும் இல்லை. ஆனால் இந்தியாவின் எதிர்ப்பை வலிமையாகப் பதிவு செய்திருக்க வேண்டும்.

### வெளிப்படையாக நடந்து கொண்டார்

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு வட மாகாணத்துக்குப் பயணம் செய்த முதல் வெளிநாட்டுப் பிரதமர் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டார். அது ஒரு புறம் இருக்க. அங்கிருந்த மக்களையும் சந்தித்தார். வடக்கு மாகாண முதல்வரையும் சந்தித்தார். இலங்கை ஜனாதிபதி ராஜபக்‌ஷவையும் சந்தித்தார். உள்நாட்டுப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கொழும்பில் பத்திரிகையாளர்களிட மும், ஜனாதிபதி ராஜபக்‌ஷவிடமும் வெளிப்படையாக வற்புறுத்திவிட்டு நாடு திரும்பி இருக்கிறார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டாக வேண்டும் என்றோ, அப்படியே கலந்து கொள்வதாக இருந்தாலும் பிரதமர்தான் கலந்து கொள்ள வேண்டும் என்றோ கட்டாயம் எதுவும் இல்லை. இலங்கையில் நடந்தேறிய மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கவும், இனப்படுகொலையைக் கண்டிக்கும் விதத்திலும் இந்தியா பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்திருந்தால் அதில் தவறேதும் இல்லை. கனடாவும், மொரீஷியஸும் எதிர்ப்புத் தெரிவிக்குமானால், பிரச்சினையுடன் தொடர்புள்ள இந்தியா புறக்கணிப்பதில் என்ன தவறு?

### ராஜதந்திரம் இதுவல்ல

தமிழக அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு சரியா தவறா என்பதல்ல கேள்வி. இந்தியா ஒரு கூட்டமைப்பாக இருக்கும் நிலையில் மாநில உணர்வுகளுக்கு மதிப்பளித்தாக வேண்டும் என்பதுதான் உண்மை நிலைமை. இலங்கையைப் பகைத்துக் கொள்ள முடியாது என்பதற்காக, இலங்கையில் நடப்பதை எல்லாம் வேடிக்கை பார்க்க வேண்டும் என் பதல்ல ராஜதந்திரம். நமது கோரிக்கைகளுக்கு இலங்கை செவி சாய்க்க வைக்க உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தால் முடியவில்லை என்று சொன்னால் வெட்கக்கேடு.

நமது பிரதமர் வடக்கு மாகாணத்துக்குப் போயிருக்க வேண்டும். நமது செலவில் இலங்கையில் நடக்கும் வளர்ச்சிப் பணிகளை நேரில் பார்த்திருக்க வேண்டும். அது அந்த மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்திருக்கும். நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதுதான் புத்திசாலித்தனம். பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாததில் எனக்கும் வருத் தம் தான் என்று பேசியிருக்கிறார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித். இலங்கையில் நடந்த இனப் படுகொலைக்காகவும், போரின் போது நடந்த மனித உரிமை மீறல்களுக்காகவும் சர்வதேச விசாரணை வேண்டும் என்கிற கோரிக்கையை இந்தியா ஏற்கிறதா இல்லையா என்கிற கேள்விக்கு இதுவரை தெளிவான பதில் தரப்படவில்லை.

ஜனாதிபதி ராஜபக்‌ஷக்கு ஒரு ஆலோசனை- இலங்கைக்கு என்று தனியாக ஒரு வெளிவிவகார அமைச்சர் தேவையில்லை. அந்த வேலையை சல்மான் குர்ஷித் திறம்படச் செய்கிறார்!


*(நன்றி-தினமணி)*

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு வட மாகாணத்துக்கு பயணம் செய்த முதல் வெளி நாட்டுப் பிரதமர் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டார், அது ஒரு புறம் இருக்க. அங்கிருந்த மக்களையும் சந்தித்தார். வடக்கு மாகாண முதல்வரையும் சந்தித்தார்.

# பிள்ளைகளே

## பெற்றோரின் பொறுப்பு உங்களதே

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி



மனிதனது வாழ்க்கைப் பருவம் அவனுடைய ஆயுள் காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றமடைந்த வண்ணம் இருக்கும். இந்த வாழ்க்கைப் பருவத்தில் 'முதுமைப் பருவம்' வாழ்க்கையில் கடைசிக் காலமாகும். இன்றைய உலகில் 65 வயதடைவதை முதுமையின் ஆரம்பம் எனக்கெனலாம்.

முதியோர்களை முதியவராகப் பார்க்காது குழந்தைகளாக நினைத்துப் பார்க்க வேண்டும். முதியோர்களில் குழந்தைத் தன்மைகளே அதிகம் காணப்படும். எனவே அவர்களை முதிய குழந்தைகளாகக் கருதி, அத்தகைய முதிய குழந்தைகளை ஒவ்வொரு பிள்ளைகளும் கவலை கொள்ள விடக்கூடாது. சீனாவில் பெற்றோரைப் பாதுகாக்கத் தவறும் பிள்ளைகளைத் தண்டிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. நம் நாடும் ஏன் இதுபற்றி சிந்திக்கக் கூடாது?

### அதிகரித்துச் செல்லும் முதியோர் வீதம்

உலகளாவிய ரீதியில் முதியோர் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது. ஐ.நா.சபையின் கணிப்பீட்டின்படி உலகில் தற்போது ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் முதியோர் காணப்படுகின்றனர். தற்போது உலகளாவிய ரீதியில் 60 கோடி முதிய வர்கள் இருப்பதாக அறிவிக்கப் படுகிறது. இந்தத் தொகை 2050 ஆம் ஆண்டளவில் 900 கோடி யாக அதிகரிக்கலாம் என நம்பப் படுகிறது.

இலங்கையில் 2000 ஆம் ஆண்டில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 9.2 வீதம் இருந்ததாகவும், 2011 ஆம் ஆண்டில் 12.2 வீதம் இருந்ததாகவும், இலங்கையில் உள்ள முதியோர்களில் 60-70 வயதுக்கு இடைப்பட்டோர் 54.4 வீதம் எனவும், 2021 ஆம் ஆண்டு 60-74 வயதுக்கு இடைப்பட்டோர் 77.2 வீதமாக இருப்பர் எனவும், 2030 ஆம் ஆண்டில் இலங்கையின் முதியோர் எண்ணிக்கை இரு மடங்காகும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுகாதார வசதிகள் அதிகரித்தமை, பிறப்பு வீதம் குறைவடைந்தமை, ஆயுட்காலம் அதிகரித்தமை , இளைஞர் புலம் பெயர்வு அதிகரித்தமை என்பன முதியோர் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாகியுள்ளது. எனவே நாம் முதியோர் பற்றிய விடயத்தில் கரிசனை கொள்ளத் தான் வேண்டும். இல்லையேல் அவர்கள் வாழ்வு கேள்விக்குறி ஆகிவிடும்.

### முதிய பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும்

பல்வேறுபட்ட அக, புறக் காரணிகள் காரணமாக பிள்ளைகள் முதியோர் நலனில் பெரிதும் அக்கறை கொள்வதில்லை. பிள்ளைகளின் அலட்சியப் போக்கு, முதியோரின் தொற்று வியாதிகள், நவநாகரிக வாழ்க்கை முறை, இயந்திரமயமான வாழ்க்கை முறை, கூட்டுக் குடும்பமற்ற வாழ்க்கை முறை, வீட்டில் கணவன் மனைவி என இருவரும் வேலைக்கு செல்லுதல், பராமரிப்புச் செலவீனம், முதியோர் பேரப் பிள்ளைகளுடன் முரண்படுதல், பிள்ளைகள் பெற்றோர் இடையிலான கருத்து வேறுபாடுகள் போன்ற காரணங்களால் முதியோர்கள் பிள்ளைகளால் ஒதுக்கப் படுகின்றார்கள்.

இவ்வாறு ஒதுக்கப்படுவதனால் அவர்கள் முதியோர் இல்லங்களை நாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இலங்கையில் 278 முதியோர் இல்லங்களில் 6,705 பேர் வாழ்கிறார்கள். வட மாகாணத்தில் 13 முதியோர் இல்லங்கள் இயங்குகின்றன. இந்தத் தரவிலிருந்து முதியோரின் நிலை பற்றி புரிந்து கொள்ள முடியும்.

### பெறுமதியை உணருங்கள்

முதியோர் தொகை அதிகரித்துள்ளதாலும், அவர்கள் பிள்ளைகளுடன் வாழாது முதியோர் இல்லங்களில் வாழ்வதாலும், பிள்ளைகள் தூர விலகிச் செல்வதாலும், நோய் நிலையில் வாழ்வதாலும், ஒதுக்கி விடப்பட்டதாலும், அவர்களுக்கான ஆதரவு மனங்கள் குறைந்ததாலும், அன்பு அரவணைப்பிலிருந்து விலகிச் சென்றதாலும் முதியோருக்கு சமூகத்தில் முக்கிய முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக உலக சுகாதார நிறுவனம் இந்த வருட உலக உளநல நாளை, முதியோர் உளநலம் தொடர்பாக முக்கியத் துவம் கொடுத்து 2013 இன் உளநல தினத்தின் தொனிப் பொருள் "முதியோர் நலன் பேணல்" என்பதாக ஆக்கியுள்ளது. இதன் நோக்கம் இதன் மூலமாவது பிள்ளைகள் மத்தியில் முதிய பெற்றோர் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதாகும்.

பெற்றோர்களைப் பிள்ளைகள் தான் பராமரிக்க வேண்டும். நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்க்க எவ்வளவு கஷ்டப்படுகின்றீர்கள், உங்கள் பிள்ளைகளால் எவ்வளவு துன்பப்படு கின்றீர்கள், அதே கஷ்டம், அதே துன்பம் உங்களது பெற்றோருக்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை மனதில் சற்று நிறுத்திப் பாருங்கள். நீங்கள் உங்கள் பெற்றோரைக் கவனிக்காது விடுவீர்களாயின், உங்களைப் பார்த்து உங்கள் பிள்ளைகளும் உங்களை உங்களது வயதான காலத்தில் அவ்விதமே நடத்தமுனைவர். உங்கள் எதிர்காலத்தை உணர்ந்தாவது உங்களது முதிய பெற்றோர்களை மரியாதையாக நடத்திக் கொள்ளுங்கள்.

முதியோரின் பெறுமதியை உணர்ந்து அவர்களை அரவணைத்து, அன்பு காட்டி, மதித்து, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து விடுவித்து மனத் தாங்கலின்றி உங்களுடன் வீட்டின் உறுப்பினர்களுள் ஒருவராக வைத்திருக்க வேண்டும். அதன் மூலம் பல நன்மைகள் உங்களை வந்து சேரும். ஆரோக்கியமான முதியோர் சமூகம் நல்ல அறிவுடைய, பகுத்தறிவுள்ள சமூகமாகும். அவர்களது அனுபவ முதிர்ச்சி வீட்டிலுள்ள இளைஞர்கள், யுவதிகளை நல்வழிப்படுத்தும். இதன் மூலம் ஆரோக்கியமான, பண்புள்ள குடும்பம் உருவாகும்.

முதியோர்கள், குடும்பத்தின் உறவுகளை வளப்படுத்துபவராகவும், சமூக பாரம்பரியங்கள், விழுமியங்களை சொல்லிக் கொடுபபவராகவும், கூட்டுக் குடும்ப உறவை வலுப்படுத்துபவராகவும், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், மருத்துவராகவும், கண்காணிப்பாளராகவும், பாதுகாவலராகவும், அனுபவப் பகிர்வாளராகவும், சிறந்த மத்தியஸ்தராகவும், தன்னம்பிக்கை ஊட்டுபவராகவும், பிரச்சினைகளிலிருந்து விடுவிப்பவராகவும், மன இறுக்கத்தைக் குணப்படுத்துபவராகவும், கதைகள் ஊடாக சிறந்த கருத்துக்களை மெதுவாக மனங்களுள் செலுத்துபவராகவும் விளங்குகின்றனர்.

முதியோர் இல்லாத வீடுகள் கருவறை இல்லாத ஆலயம் போன்றது. முதிய குழந்தைகளின் சிரிப்பில் ஆண்டவனைக் காணலாம். இவற்றை தொலைத்த குடும்பங்களின் கோலங்கள் அவலக் கோலங்களாக மாறியுள்ளன. எனவே எமது வாழ்வியலின் முதுகெலும்புகள் முதியோர் என்பதை உணர்ந்து மதிப்பும் மரியாதையும் வழங்கி அவர்களை அன்புடன் பராமரிக்க வேண்டும். முதியோர்கள் நமது முதுசம் என்பதை மறந்து விடாதீர்கள்.

---

# நீங்கள் கைபேசி

## பயன்படுத்துபவரா?

அனுஜன்

கைத்தொலைபேசியைத் தொடர்ந்து பயன்படுத்தினால் அதிலிருந்து வரும் கதிர்களால் நம் மூளை பாதிக்கப்படும் எனவும், அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை எனவும் எதிர்மறையான விவாதங் களும் அது குறித்த ஆராய்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன. இருப்பினும் கைத்தொலைபேசி இயங்கும் போது கதிர்வீச்சு இருப்பது என்னவோ உண்மை தான். எனவே அது பாதிப்பை ஏற்படுத்துகிறதா என்ற விவாதத்திற்குள்ளே போகாமல் சற்று பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம். இயலுமானால் உங்கள் உடம்பிலிருந்து கைத்தொலைபேசியை சற்றுத் தூரத்திலேயே வைத்துப் பயன்படுத்தவும். இதனால் கதிர்வீச்சு உங்கள் உடம்பை அடைவது குறையும்.

கைத்தொலைபேசியை அதிகம் மூடிவைக்க வேண் டாம். இதனால் சமிக்ஞை வந்தடைவது சற்றுத் தடுக்கப்படும். சமிக்ஞை எப்படியும் அடைய வேண்டும் என்ற முயற்சியில் கதிர் வீச்சு அதிகமாகும்.



பேசும் போது கைகளால் அதிகம் மூடுவதும் இதே விளைவை ஏற்படுத்தும். கைத்தொலைபேசியில் சமிக்ஞைகள் எந்த அளவில் பெறப்படுகின்றன என்பதைக் காட்டும் இன்டிகேட்டர் அனைத்துக் கைத்தொலைபேசிகளிலும் இருக்கும். இது குறைவாக இருக்கும் போது ரேடியேஷன் என்னும் கதிர் வீச்சு அதிகமாக இருக்கும். சரியாக இருக்கும்போது மிதமாக இருக்கும். மேலும் குறைவாக இருக்கையில் மின் சக்தியும் அதிகம் செலவழிக்கப்படும். எனவே சமிக்ஞை குறைவாக இருக்கும் இடத்தில் இருந்து பேசுவதனைத் தடுக்கவும்.

கைத்தொலைபேசியில் குறைவான நேரம் பேசவும். அதிகம் பேச வேண்டும் என்றால் தரைவழி இணைப்பைப் பயன்படுத்தவும். கார் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுகையிலும், ஏன் சைக்கிள் ஓட்டுகையிலும் கூட கைத்தொலைபேசியைப் பயன்படுத்தவே கூடாது. எமது கவனம் நிச்சயமாய்த் திசைதிருப்பப்பட்டு விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகிறது.

கட்டாயம் பேச வேண்டும் என்றால் வாகனத்தை ஓரமாக நிறுத்திப் பேசவும். அதிகமாக மின்சாரத்தில் அல்லது டிஜிட்டல் சாதனங்கள் இயங்கும் இடங்களில் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். உங்களுக்கு சமிக்ஞை கிடைப்பது சிக்கலாவதுடன் அந்தச் சாதனங்களின் இயக்கமும் தடைப்படலாம்.

மருத்துவமனைகளில் இத்தகைய சாதனங்கள் உள்ள இடங்களில் பயன்படுத்துவதை அறவே தவிர்க்கவும். அந்தச் சாதனங்கள் சரியாகச் செயல்படுவதில் சிக்கல்கள் ஏற்படலாம். விமானத்தின் உள்ளேயும் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். பயன்படுத்தலாம் என்று அறிவிப்பு வந்தால் மட்டுமே பயன்படுத்தவும். மற்ற நேரங்களில் அணைத்து வைப்பது நல்லது. சிறுவர்கள் அதிக நேரம் பயன்படுத்துவதை அனுமதிக்காதீர்கள். கர்ப்பிணிப் பெண்கள் பயன்படுத்துவதை அறவே தவிர்க்க வேண்டும் என செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. வயிற்றில் வளரும் குழந்தையை கதிர்வீச்சு பாதிக்கும் என்பதாலேயே இந்த ஆலோசனை

# சமூகத்தின் நலன் கருதி 30 ஆயிரம் மரக் கன்றுகள்

## சங்கானையூர் அபிமானி வழங்கினார்

யாழ்ப்பாணம், நவ.19

கடந்த காலங்களில் அழிவுற்ற மரங்களுக்கு உயிர் கொடுப்போம் என்ற தலைப்பில் சங்கானையூரைச் சேர்ந்த செல்லையா கோபால கிருஷ்ணன் என்பவர் முப்பதாயிரம் மரங்களை சமூகத்தின் நன்மை கருதி இலவசமாக வழங்கியுள்ளார்.


அவரது பன்முக சேவையை வலி.மேற்கு பிரதேச சபை அண்மையில் பாராட்டியுள்ளது.

கழக நோக்கம் - பசுமைப் புரட்சி நோக்கம் கருதியும், கடந்த காலங்களில் அழிவுற்ற, அழிக்கப்பட்ட மரங்களில் ஒரு தொகுதியையாவது இந்த மண்ணில் மீள் உருவாக்கம் செய்யத் தூண்டும் நோக்கில் இவர் தனது சொந்தச் செலவில் மரங்களைச் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார். இதனூடாக அழிக்கப்பட்ட மரங்களில் பத்து வீதத்தையாவது உருவாக்க வேண்டும் என்பது சமூக அபிமானியான செ.கோபாலகிருஷ்ணனின் நோக்கமாகும்.

அதனை மையமாக வைத்தே இதுவரை யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இதுவரை 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மரங்களை வழங்கி கழகத்துக்கு உதவியுள்ளார்.

அவரைப் போலவே மானியூர் பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் கடந்த 30 ஆண்டுகளில் தனது கையால் உற்பத்தியாக்கி தனது சொந்த செலவில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்களை வழங்கியுள்ளார்.

இதேவேளை, சத்தியசாயி பாபாவின் அவதாரதினமன்று ஒவ்வொரு வருடத்திலும் ஆயிரத்து 400 மரங்களை வழங்கி பசுமைக்கு உதவி வருகின்ற வை.செகரராஜசிங்கம் இந்த வருடமும் பாபாவின் பிறந்த தினத்தில் மரக் கன்றுகளை இலவசமாக வழங்கவுள்ளார். (வ-41)






கல்விச் சுற்றுலாவின் போது உதயன் பணிமனையை பார்வையிட வந்த வெற்றிலைக் கேணி கனிஷ்ட றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள். (10)

### விநாடி வினாப் போட்டி

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப விநாடி வினாப் போட்டி நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ந-35)

### மதுவரிக் குற்றம்

# மன்னாரில் ஐவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 5 பேருக்கு எதிரான வழக்குகளில் 11 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப் பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மதுவரித் திணைக் களகட்டுப்பாட்டு அதிகாரிஎன். நந்தகுமார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களத்தால் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக வீடுகளில் வைத்துக் கள் விற்பனை செய்த 4 பேருக்கு தலா ஆயிரத்து ஐந்நூறு ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபாவும் சட்ட விரோத மாக 'பியர்' விற்பனை செய்த ஒருவரிடம் 5 ஆயிரம் ரூபாவும் என தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

அதனை விட அரச சாராயத்தை வீட்டில் வைத்து விற்பனை செய்த 80 வயது முதியவர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தபோது வயதின் அடிப்படையில் அவரை எச்சரிக்கை செய்து நீதிமன்றம் விடுதலை செய்தது எனவும் தெரிவித்தார். (வ-14)

# தொழிற் பயிற்சி அதிகார சபை கற்கைநெறிகள் முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், நவ.19

முல்லைத்தீவு மாவட்ட தேசிய தொழில் பயிற்சி அதிகார சபையால் பாலிநகர், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாலிநகர் தொழில் பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில்நுட்பம், தையல் கலை, வீட்டு மின்னிணைப்பு கற்கைநெறிகளும், ஒட்டுசுட்டான் தொழில் பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில் நுட்பம், தையல்கலை ஆகிய கற்கை நெறிகளும், முல்லைத்தீவு தொழில்நுட்ப வளாகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணினி வன்பொருள் தொழில் நுட்பம், பெண்களுக்கான அழகுக்கலை, சிகை அலங்காரம், தையல்கலை, ஒட்டோ திருத்துதல், அலுமினிய கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க் குழாய் பொருத்துதல், வெளி இணைப்பு, இயந்திர திருத்தம் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் உதவிப் பணிப்பாளர், மாவட்ட தொழில் பயிற்சி நிலையம், மாங்குளம் வீதி, முல்லைத் தீவு எனும் முகவரிக்கு சுயவிவரங்களை அனுப்பி வைக்கலாம். (வ-14)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வாகனச் செலவுகள் குறையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்:** பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம்.

**மிதுனம்:** வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். அயலார் சிலரது செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**கடகம்** : பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**சிங்கம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கன்னி:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

நாளை

கார்த்திகை-04 புதன்கிழமை 20.11.2013
திதி: திருதியை பி.இ.01.24 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மா. 06.11 வரை
சுபநேரம்: 04.39 - 06.09 வரை
இராகுகாலம்: 12.09 - 01.39 வரை

**துலாம்:** மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் வாக்குவாதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு.

**தனுசு:** கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**கும்பம்:** நீண்ட நாள்களாகத் தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**மீனம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | 4 |
| | 1 | | 3 | 8 | | | | |
| 5 | | 9 | 4 | | | 3 | 2 | |
| 8 | | | 9 | | 6 | 2 | | 7 |
| 2 | | 7 | | 3 | | 4 | | 6 |
| 1 | | 6 | 2 | | 4 | | | 9 |
| | 6 | 3 | | | 9 | 5 | | 8 |
| | | | | 5 | 8 | | 4 | |
| 9 | | | | | | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 7 | 9 | 4 | 1 | 2 | 6 | 8 |
| 4 | 1 | 2 | 5 | 6 | 8 | 9 | 7 | 3 |
| 8 | 9 | 6 | 7 | 2 | 3 | 4 | 5 | 1 |
| 6 | 5 | 4 | 3 | 9 | 7 | 1 | 8 | 2 |
| 1 | 2 | 9 | 6 | 8 | 5 | 3 | 4 | 7 |
| 3 | 7 | 8 | 4 | 1 | 2 | 6 | 9 | 5 |
| 9 | 8 | 5 | 2 | 3 | 6 | 7 | 1 | 4 |
| 2 | 4 | 1 | 8 | 7 | 9 | 5 | 3 | 6 |
| 7 | 6 | 3 | 1 | 5 | 4 | 8 | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சாவகச்சேரி மக்கள் வங்கியின் சிறுவர் தின விழாவும் கௌரவிப்பும்

தென்மராட்சி, நவ.19

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையின் சிறுவர் தின விழா கடந்த மாதம் 26 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்றது.

வங்கிக் கிளையில் ஒக்ரோபர் மாதத்தில் 'இசுறு உதான', 'சிசு உதான' சிறுவர் சேமிப்பு கணக்கை வைத்துள்ளவர்களுக்கான விசேட சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் 2013 இல் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த 80 மாணவர்களும் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி கிளை மற்றும் கொடிகாமம் கைதடி சேவை நிலையங்களின் செயற்பாடுகளுக்கு பங்காற்றிய தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 60 பாடசாலைகளின் அதிபர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய உதவி முகாமையாளர் நா.நாகேஸ்வரன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

'சிசு உதான', 'இசுறு உதான' விசேட சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற சிறார்களுக்கான பரிசில்கள் மேடையில் வைத்து விருந்தினர்களால் கையளிக்கப்பட்டன. (த-9)

**வங்கிக் கிளையில் ஒக்ரோபர் மாதத்தில் 'இசுறு உதான', 'சிசு உதான' சிறுவர் சேமிப்பு கணக்கினை வைத்துள்ளவர்களுக்கான விசேட சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.**

# தங்க விருதை தனதாக்கிய மஞ்சி



இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின், (IESL) மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இலங்கை பொறியியல் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மிகப்பெரிய பிரிவின் கீழ் பொறியியல் சிறப்பு விருதை சிலோன் பிஸ்கட் நிறுவனம் வென்றுள்ளது. இவ் விருதை CBL நிறுவனத்தின் குழும துணைத்தலைவர் ரம்யா விக்ரமசிங்க மற்றும் பொறியியல் மற்றும் IT பிரிவின் குழும பணிப்பாளர் ரசித் விக்ரமசிங்க ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் விருதுகளை தேர்ந்தெடுப்பதில் வலு சேமிப்பு திட்டங்கள், புதிய தொழில்நுட்பங்கள், தொழில்நுட்ப பரிமாற்றல்கள், பொறியியல் மேலாண்மை, புதிய கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் போன்ற மிகப்பெரிய திட்டங்கள் குறித்து கவனத்தில் கொள்ளப்பட்டன.

நிகழ்வில் நடுவர்கள் மூலம் நிறுவனத்தினுள் வேலை கையாளும் விதம், நிறுவனத்தின் சந்தைப்பங்கு மற்றும் நிதி ஸ்திரத்தன்மை, உள்நாட்டு பொருள்களின் பயன்பாடு, தேசிய விருதுகள் அல்லது பதிவுகள், ஒருங்கிணைப்பு, பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்டங்கள், வேலை வாய்ப்புக்கள் மற்றும் சமூகத்தின் மீதான பங்களிப்புக்கு பொதுமக்களின் அங்கீகாரம் ஆகியன குறித்து பரிசீலனை செய்யப்பட்டன. மேலும் நிலையான பயிற்சி, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கழிவு மீள்சுழற்சி அல்லது குறைத்தல் மற்றும் தர உத்தரவாதம் தொடர்பிலான சுற்றுச்சூழல் நிர்வாகம் குறித்த விடயங்களும் ஆராயப்பட்டன. மேற்கூறிய அனைத்துப் பிரிவுகளையும் பூர்த்தி செய்த CBL நிறுவனத்திற்கு இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. (த)

## அறிமுகமாகும் அட்லஸ் பெல்டா

இலங்கையின் முன்னணி காகிதாதிகள் உற்பத்தி நிறுவனமான அட்லஸ் தடித்த மற்றும் மெல்லிய ரேகைகளை வரையக் கூடிய அட்லஸ் பெல்டா (Atlas FELTA) ரக பேனைகளை சந்தையில் முதல் தடவையாக அறிமுகம் செய்துள்ளது.

இவற்றைக் கொண்டு வரையவும், வர்ணந்தீட்டவும் முடியும். 12 வர்ண பேனைகளைக் கொண்ட பெட்டிகள் விற்பனைக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இந்த பேனைகளின் மூலம் எழுதப்படும் எழுத்துக்கள் கழுவிக் கொள்ளக்கூடியவை என்பதுடன், தொடர்ச்சியாக மை சென்றடைவதுடன், எந்த சந்தர்ப்பத்திலும், கசிவு ஏற்படாத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனவே சிறுவர்கள் தமது ஆடைகள் கறைபடிந்துவிடும் என்ற பயம் இல்லாமல் இந்த பேனைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும். உயர் தரம் மற்றும் பாதுகாப்பு தரங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் இந்த பேனா வகைகள் நச்சுத்தன்மை அற்றதுடன், சந்தையில் காணப்படும் ஏனைய பேனாக்களுடன் ஒப்பிடுகையில் நீண்ட காலம் பாவிக்கக்கூடியவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அட்லஸ் பெல்டா என்பது சிலோன் பென்சில் கம்பனியின் மூலம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்த ஆய்வு நடவடிக்கைகளின் பலனாக தயாரிக்கப்பட்டுள்ளது. (த)


# இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மிகப் பெரிய ஆயுள் காப்புறுதி இழப்பீடு

வடபிராந்தியத்தில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் மிகப்பெரிய ஆயுள்காப்புறுதி இழப்பீடாக 61 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான வர்த்தகர் இ.ராகுலன் என்பவருடைய மரணக்கொடுப்பனவான 61 லட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலையை அவரது தாயாரிடம் நெல்லியடிக் கிளையின் விற்பனை முகாமையாளர் குமரகுரு ஆறுமுகன் கையளித்தார்.

இழப்பீட்டுடன் இறந்தவருக்குரிய இரண்டு வருட இலாபப் பங்காக மேலதிகமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்த வருடத்தில் வட மாகாணத்தில் வழங்கப்பட்ட மிகப் பெரிய இழப்பீட்டுத் தொகை இதுவாகும். இந்தப் பெரிய இழப்பீடானது வழங்கப்பட்டமை, காப்புறுதி வரலாற்றின் மிகப் பெரிய சாதனையாகும். அத்தோடு இவை வருடா வருடம் வழங்கப்படுகின்றன. இலாபப் பங்கு 51 ஆவது ஆண்டு நிறைவில் 2012 ஆம் ஆண்டுக்கு உரிய இலாபப் பங்காக 4.2 பில்லியன் ரூபாவை அறிவித்திருந்தமை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்குக் கிடைத்த பெரிய நன்மை ஆகும். (த)



இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடம் பெற்ற ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவன் ப.தனுராஜுக்கு சம்பத் வங்கியின் சுன்னாகம் கிளை உதவி முகாமையாளர் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று பாடசாலை மண்டபத்தில் பணப் பரிசினையும் ஒரு வருடத்துக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களையும் வழங்கிக் கௌரவித்தார். (த)




HSBC வங்கியின் யாழ். கிளையில் அண்மையில் நடைபெற்ற கலைவிழாவின்போது, விருந்தினராகக் கலந்து கொண்ட திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளிப் பணிப்பாளர் திருமதி க.தனபாலன் மங்கள விளக்கேற்றுவதையும், வங்கி முகாமையாளர் சி.அரவிந்தன் உட்பட வங்கி ஊழியர்களையும் காணலாம். (த-29)



பிகாஸ் கம்பஸ் யாழ்.கிளையின் மாணவர்களின் இரத்த தான நிகழ்வு கடந்த சனிக்கிழமை கம்பஸில் இடம்பெற்றது. இதில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர், மாணவர்களிடம் இருந்து இரத்தத்தைச் சேகரித்தனர். (த-14)

### விளையாட்டு விழா

யாழ்.கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் விசேட தேவையுடைய மாணவருக்கான விளையாட்டு விழா கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். யாழ்.பிரதிக் கல்விப் பணிப் பாளர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி கலந்து கொள்வார். (ந)

## திரையிடப்படுகிறது ஆவணப்படம்

அலையன்ஸ் பிரான்செய்ஸ் டி என்ற நிறுவனத்தின் கிளையும், யாழ்.பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையமும் இணைந்து "Elle, or The Crucible of Freedom" என்ற திரைப்படத்தை திரையிடவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசல்வீதியில்அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இந்தப் படம் திரையிடப்படும். பிரான்ஸ் நாட்டின் திரைப்படம் மற்றும் ஆவணப்படத் தயாரிப்பாளர் வில்லியம் கெலி என்பவரின் தயாரிப்பிலான 52 நிமிடங்களைக் கொண்டுள்ள இந்தத் திரைப் படம், இந்து சமுத்திரத்தில் பிரெஞ்சு காலனித்துவத்தின் கீழ் இருந்த தீவு ஒன்றில் அடிமைகளாக வாழ்ந்த மக்களைப் பற்றிய ஓர் ஆவணப் படமாகும்.

பிரெஞ்சு மொழியில் அமைந்த இந்தத் திரைப்படத்துக்கு ஆங்கில உபதலைப்புக்கள் தரப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-10)

### கூட்டம்


காணிப் பயன்பாட்டு திட்டமிடல் கூட்டம் கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார். (ந-35)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

அமரர்

## நல்லையா ஜெயக்கொடி

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் பனை அபிவிருத்திச்சபை)



பிறப்பு 25★11★1955

இறப்பு 20★10★2013

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (20.11.2013) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி இவருக்காக செபிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளவும்.

மேலும் அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் பல விதங்களில் உதவி புரிந்து ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதி சடங்குத் திருப்பலியை நிறைவேற்றிய அருட்தந்தை எட்மன்மைக்கல் OMI மற்றும் ஆசனக்கோயில் பங்குத் தந்தையர், உதவிப் பங்குத் தந்தையர்கள், அருட் தந்தையர்கள், யாழ் புனித பரியோவான் ஆலய முதற்குரவர், நோயுற்றிருந்த போது நற்கருணை வழங்கிய அருட் தந்தையர்கள், வழிபாடு நடத்திய பிரான்சிஸ்கன் சபையினர், பனை அபிவிருத்திச்சபை தலைவர், உத்தியோகஸ்தர்கள்,யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், இலங்கை மின்சாரசபை மனித வலு அலுவலர், உத்தியோகஸ்தர்கள், சாவகச்சேரி பணிமனை உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொலைபேசி வாயிலாக ஆறுதலளித்தோர் இறுதி நிகழ்வில் அஞ்சலி வெளியிட்டோர், மலர்வளையங்கள் சாத்தியோர், இறுதி வழிபாட்டை நடத்தி சேமக்காலை வரை பாடல்கள் பாடிய சகோதரர்களுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகள் உரித்தாகுக.

"அருள்யோ ரோஸ்" வாசா
41, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (021 222 9143)

குடும்பத்தின் சார்பாக
அன்ரன் ஞானப்பிரகாசம்
[மின் அத்தியட்சகர் இ.மி.ச. சாவகச்சேரி]

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02.08.1989

ஆண்டவன் அடியில் 19.11.2008

### செல்வி மகேந்திரன் கௌரி

இன்று நீ பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆகுதே
தாங்க முடியவில்லை உந்தன் இழப்பை
முகத்திலே சிரிப்பதனை உதிர்ந்துவிட்டு
முத்தான கதை பேசிக் கொள்ளும் செல்லமே!
எங்கள் உயிர் இருக்கும்வரை
என்றும் உன் நினைவுடன்.

நி.மு: கொடுக்குளாய் வீதி,
உடுத்துறை தாளையடி,
த.மு: வேம்படி வீதி,
உடுத்துறை தாளையடி.

குடும்பத்தினர்
தந்தை, தாய், சகோதரிகள்,
மைத்துனன், பெறாமகன்.

(40018) (7.6.3)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை வதனகாந்தன்



வேலணையைப் பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வதனகாந்தன் நேற்று (18.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சகாயலட்சுமி (குமாரி)யின் அன்புக் கணவரும், தில்லைக்காந்தன், பேரின்பறதி, ஜெயக்காந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரதாப் (பிரான்ஸ்), பிரதுஷா, தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துஜா, பிரதீபன் ஆகியோரின் மாமனாரும், பிறீத்திகாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (18.11.2013) திங்கட்கிழமை துண்டி இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதீபன் (மருமகன்)
28/2, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம். 077 851 3583

(40090)(3.5.4)

தகவல்: குடும்பத்தினர்.

## சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம் அப்பா!

## விண்ணக வாழ்வின் ஓராமாண்டு நினைவஞ்சலி

அமரர்

## சுங்கிலியன் இராமன்

(EY-2711)



தோற்றம் 06.12.1931

மறைவு 31.10.2012

ஓராண்டும் மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மாண்டவர் மீண்டும் வருவதில்லை
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்த
அன்புத் தந்தையே!
எங்களை நிர்க்கதியாய் விட்டு
எங்கு சென்றீர்கள் அப்பா!
காலங்கள் ஆயிரம் போனாலென்ன
மறக்கமுடியுமா உங்கள் நினைவை
உலகில் உயிருள்ளவரைக்கும்
உங்கள் நீங்காத நினைவுகள்
எம்முடன் தொடரும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!


இன்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கைதடி தெற்கு கைதடி.

குடும்பத்தினர்.

(40104)(12.3.6)



கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வான பரிசில் வழங்கல் நிகழ்வும் 'கரங்கள்' சஞ்சிகை வெளியீடும் அண்மையில் நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார். (ஒ-9)

# புனரமைக்கப்படுமா வீதி?

சங்கானை, நவ.19

சங்கானைச் சந்தையில் இருந்து துணைவி - சங்கரத்தை ஊடாக அராலி வரை செல்லும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

அடுத்தடுத்துக் குன்றும் குழியுமான நிலையில் இந்த வீதி உள்ளதால் வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமலுள்ளது.

இதனால் அராலியில் இருந்து சங்கானைச் சந்தைக்கும், வங்கிகள், அரச அலுவலகங்களுக்கும் வரும் பொதுமக்கள் உட்பட பாடசாலை செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி தற்போது பெய்து வரும் மழையினால் மேலும் மோசமடைந்த நிலையிலுள்ளது. இந்தப் பாதை, வீதி அபிவிருத்தித் திணைக் களத்தினால் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் சீராக்கப் பட்டிருந்தும் பாவனைக்கு தவாத நிலையில் உள்ளது.

இந்தப் பாதையைச் சீர் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட் டார்களா? என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-29)

# கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

அளவெட்டி, நவ.19

அளவெட்டி, மல்லாகம், கந்த ரோடைப் பகுதிகளில் கால் நடைகளைக் கட்டி வளர்க்கு மாறு அளவெட்டி விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது.

கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்கள் நாசமாக்கப்பட்டு வருகின்றன. எனவே கால்நடைகளைக் கட்டி வளர்க்கத் தவறும் பட்சத்தில் கால்நடைகளின் உரிமையாளரின் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ந-36)

# வரி செலுத்துவோர் தொகை அதிகரிக்க திட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.பிராந்தியத்தில் வரி செலுத்துவோர் தொகை 18 வீதமாக அதிகரித்துள்ளது. இந்தத் தொகையை 30 வீதமாக அதிகரிப்பதற்கான திட்டத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி மல்லிகா சமரசேகர தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் பொன்விழா நிறைவு நிகழ்வு நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன் போது தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்;

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடந்த 4வருடங்களில் நிர்வாக ரீதியாகவும் உயர்வடைந்துள்ளது. வங்கிகளுடன் இணைந்து நிர்வாக ரீதியான செயற்றிட்டத்தை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். (வ-14)

# வர்த்தகப் பாதிப்புக்கு உரிய தீர்வு அவசியம்

## இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலக பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

குடாநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் தற்போது பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. இதற்கான உரிய தீர்வுகள் உடனடியாகக் காணப்பட வேண்டியது அவசியமாகும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்தார்.



உள்நாட்டுஇறைவரித்திணைக் களத்தின் பொன் விழா நேற்று நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது;

உள்ளூராட்சி இறைவரித் திணைக்களம் வரிசெலுத்தும் நடைமுறைகளில் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகிறது. தற்போது யாழ். பிராந்திய நிலையம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வருமானவரி செலுத்துவோரையும், 1,800 இற்கும் மேற்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்து வோரையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வரி செலுத்துவதில் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வே தொகை அதிகரிப்புக்கும் காரணம். கடந்த வருடம் வரி செலுத்துவதில் 7 பேர் விருதைப் பெற்றிருந்தனர். இந்த வருடம் 18 பேராக அதிகரித்துள்ளது.

தற்போது குடாநாட்டு வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டிருப்பதை எல்லோரும் அறிவர். இதற்கான உரிய தீர்வுகள் காணப்பட வேண்டியது அவசியமாகும். உரியவர்களுடன் கலந்தாலோசித்து உடனடித் தீர்வைக் காண்பதன் ஊடாக வர்த்தகர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும்-என்றார்.

இந்த நிகழ்வில் உரிய முறையில் வரி செலுத்துவோர் 50 பேருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் திருமதி மல்லிகா சமரசேகர கலந்து கொண்டதுடன் ஏனைய உயர் அதிகாரிகள், வரி செலுத்துவோர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-14)

ஆசிரிய சேவையில் உள்வாங்குமாறு

# ஆசிரிய உதவியாளர்கள் கல்வியமைச்சரிடம் மனு

புதிதாக ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்களைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள் தம்மை ஆசிரிய சேவையில் உள்வாங்குதல் தொடர்பான மனுவொன்றை வடமாகாண கல்வியமைச்சரிடம் சமர்ப்பிக்கும் பொருட்டு கையளித்துள்ளனர். அந்த மனுவில் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வன்னியில் உள்ள பாடசாலைகளில் புதிதாக ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள நாம் போர், இடப்பெயர்வு என அவலம் நிறைந்த காலங்களில் 10 வருடங்களுக்கும் மேலாக மாணவர்களது கல்விக்காக தொண்டராசிரியர்களாக சேவையாற்றி வந்துள்ளோம்.

முன்னர் ஏனைய தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அரச கட்டுப்பாடற்ற பகுதி எனக் காரணம் கூறி எமக்கான நியமனம் மறுக்கப்பட்டது.

போர் முடிந்த பின்னர் மீள்குடியமர்வைத் தொடர்ந்து எமக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படுமெனப் பலராலும் பல தடவைகள் கூறப்பட்டது. ஆனால் ஏமாற்றமே கிடைத்தது. இதனால் பல கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருந்தோம். இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் எமக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

எமக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட மாதத்தில் இருந்து மூன்று மாதங்களாக 10 ஆயிரம் ரூபா வேதனமாக வழங்கப்பட்டது. ஆனால் பின்னர் 6 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

எம்மில் பலருக்கு மிகவும் தொலைதூரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்துச் செலவுகளுக்கே எமது வேதனம் போதாமலுள்ளது. அனைத்து ஆசிரிய உதவியாளர்களும் குடும்பங்களைக் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தற்போது 6 ஆயிரம் ரூபாவாக எமது வேதனம் குறைக்கப்பட்டதால் சொல்ல முடியாத அளவு பாதிப்புக்களை நாம் எதிர்கொண்டுள்ளோம்.

ஆசிரிய உதவியாளர் என்ற காரணத்தால் எமக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி உதவி உட்பட அனைத்து உதவி திட்டங்களும் மறுக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, ஆசிரிய உதவியாளர்களாகிய எம் நிலைமையைப் புரிந்து கொண்டு எமக்கான வேதனத்தை அதிகரித்து வழங்குவதற்கும் எம்மை ஆசிரியர் சேவை 03-II இற்குள் உள்வாங்கி எம்மையும் ஆசிரியர்களாக ஏற்று மாணவர்களின் கற்றல்செயற்பாட்டில்நாமும்முழு மனதோடு ஈடுபட உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (கு)

# வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

தென்மராட்சி, நவ.19

நுணாவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நகரசபை உறுப்பினர்களான க.மயில்வாகனம் தசதீஸன், மதிருக் குமரன் ஆகியோரும்கலந்துகொள்வர்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கல், ஒக்ரோபர் மாதத்தில் நூலக அங்கத்தவராக இணைந்து கொண்டவர்களுக்கு இலவச அங்கத்துவ அட்டை வழங்கல்.போன்றவை இடம்பெறும். (ந-9)

# நல்லொழுக்க தின போட்டி முடிவுகள்

வடமராட்சி,நவ.19

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாட' சாலை மாணவர்கள் இடையே நடத் திய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளின் விவரமும், வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்களும் வருமாறு:

பருத்தித்துறைக் கோட்டம்

ஆரம்பப் பிரிவு - பேச்சு
நி.நிருபா-பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை. வெ.அருட்குமரன்-வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தி. அ.றொசாயினி-பருத்தித்துறை சென்தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை.

ஆரம்பப் பிரிவு - கட்டுரை
ஜெ.சானுகா-பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை, ந.அனுசன்- பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி., இ.லசிக்கா- துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலை.

கீழ்ப் பிரிவு -பேச்சு
சி.வைஸ்ணவி-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை.ஜெ.ஜெப பிரின்சியா-பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, வி.திருமகள்-பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.

கீழ்ப் பிரிவு -கட்டுரை
ஆ.அனுசியா-வல்வெட்டித்துறை சிவகுரு வித்தி. வீ.அன்ரனி சாள்ஸ்-பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, த.தசானா-தும்பளை சிவப் பிரகாச வித்தி.

கீழ்ப் பிரிவு - கவிதை
ச.அஜந்தினி-வல்வெட்டித்துறை மகளிர் வித்தி., ம.ஜினித்தா-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, இ.கிருத்திகா- புலோலி புற்றளை ம.வி.

மத்தியபிரிவு -பேச்சு
சி.சங்கவி-பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, சி.சிந்துஜா-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை. உ.சிம்ரா-பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.

மத்திய பிரிவு - கட்டுரை
ர.விதுசன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ம.கிரிசாந்தி- வல்வெட்டித்துறை சிவகுருவித்தி., க.ரக்சனா-பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாட சாலை, தெ.சர்மிளா- பொலிகண்டி இந்து த.க.பாடசாலை.

மத்திய பிரிவு - கவிதை
ஜெ.விவேயா- பருத்தித் துறை சித்தி விநாயகர் வித்தி. ந.நிவியா-பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, பா.பிரவிணா- பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

மேற்பிரிவு - பேச்சு
சோ.வைதேகி-பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, ஆ.தமிழினி-வல்வெட்டித்துறை மகளிர் ம.வி., ப.கஜலட்சுமி-புலோலி புற்றளை ம.வி.

மேற்பிரிவு - கட்டுரை
செ.மனோஜா-தும்பளை சிவப்பிரகாச வித்தி, லோ.கிருசாந்தினி-பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, தி.கஸ்தூரி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை.

மேற்பிரிவு-கவிதை
ச.குகதர்சன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, அ.அனுஜா-பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, சி.கோமகள்-புலோலிபுற்றளை ம.வி. (ந-8)

# வாழைச்சேனையில் ஓட்டோவுக்கு குறியீடு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் உள்ள ஓட்டோக்களுக்கு பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பொலிஸாரால்



பிரதேச குறியீடு பொறிக்கும் நிகழ்வு ஓட்டமாவடி ஓட்டோ தரிப்பிடத்தில் இடம்பெற்றது.

ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் தங்களது பொலிஸ் பிரிவில் உள்ள ஓட்டோக்களை அடை யாளப் படுத்தி குறியீடுகள் இடப்பட்டு வருகின்றது.

அதனால் குற்றச் செயல்களை குறைப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்று வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)



உலக அஞ்சல் தினம் தொடர்பான பரிசளிப்பு விழா திருகோணமலை குளக் கோட்டன் கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது விருந்தினர் கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

## டெங்கு பரிசோதனை

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவிலுள்ள நாவற்குடா பிரதேசத்தில் டெங்கு பரிசோதனை நடவடிக்கை நடைபெற்றது.

இந்த நடவடிக்கையை காத்தான்குடி பொலிஸார், மட்டக்களப்பு மாநகர சபை, மண் முனை வடக்கு சுகாதார அலுவலகம், விசேட அதிரடிப் படையினர், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்டனர்.

நாவற்குடா பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுற்றுப்புறச் சூழல் என்பவற்றை பரிசோதித்ததுடன் டெங்கு தொடர்பான அறிவூட்டலையும் மேற்கொண்டனர். (ச)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை
செல்வி அருள்மொழி குணரட்ணம்
அவர்கள் 11.11.2013 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து எமது பாடசாலைச் சமூகம் மிகுந்த மனவேதனை அடைவதுடன், அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம் (40182) (7.6.3)
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்


# விரைவில் அரசியல் தீர்வு தேவை அனுபவங்களையும் பகிரத் தயார்

## தென்ஆபிரிக்க ஜனாதிபதி அறிவிப்பு



கொழும்பு,நவ.19

இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது தென் ஆபிரிக்கா.

" போருக்கு பின்னரான காலத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தணிய வைக்கவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் தென் ஆபிரிக்கா தயாராகவுள்ளது " என்று அந் நாட்டின் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா தெரிவித்தார்.

"எமது நாடு மிகவும் ஆழமான மற்றும் சிக்கலான மோதல்களைச் சந்தித்திருந்தது. எனினும், பேச்சுகள் மூலம் ஒரு வழிமுறையைக் கையாண்டு பிரச்சினைகளைத் தீர்த்துள்ளளோம்." எனவும் இலங்கை ஜனாதிபதியுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையே தற்போது உயர்ந்த மட்டத்தில் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

**கால அவகாசம் தேவை- மஹிந்த**

எனினும், எமது நாட்டில் இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு சிறிது காலமாகும்.

அதற்கான அவகாசம் தேவை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

**" - "**

**இனப் பிரச்சினைக்கான தீர்வு இன்று ஆரம்பித்து நாளை முடித்து விடக் கூடிய விடயமல்ல.**

இலங்கையிலும் அதற்கான வழி முறைகள் தொடங்கியுள்ளன என்றும், நாட்டின் அரசி யல் சாசனத்துக்கு அமையவே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்று ஆரம்பித்து நாளை முடித்துவிடக் கூடிய விடயமல்ல எனவும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார். (ச-சி)


## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
நாகமுத்து ரவிச்சந்திரன்
(முன்னாள் ஆசிரியர்,
யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை)
திதி: கார்த்திகை மாத அபரபக்கத் துதியை 19.11.2013
(செவ்வாய்க்கிழமை)

வையத்தின் மைந்தனாக
16★08★1965

தெய்வத்தின் சொந்தமாக
06★12★2006

ஞானத்தின் திருவுருவே நம் வாழ்வின் ஒளிவிளக்கே!
தேனொக்கும் வாழ்வளித்த தெய்வத் திருவுருவே!
கண்ணீரில் கரைகின்றோம் தெய்வமே!
கண்ணீரில் கரைகின்றோம்
எம் உடலில் உயிர் வாழும் காலம் வரைக்கும்
எம்முள் இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்!

"ரவி மஹால்"
நாவற்காடு, வரணி.
[சி/14925][3.6.4]

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பான மனைவி
திலகவதி
மற்றும் குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்
14.01.1953

மனங்களில்
20.10.2013

திருமதி செல்லம்மா சந்திரசேகரம்

"ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா உனைப் போல வருமா?"

கடந்த 20.10.2013 எம்மை விட்டுப்பிரிந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கின்றன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(C/14926)(10.6.3)

திருவேரகம்,
கைதடி கிழக்கு.

அன்புக் கணவர்,
மகன்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
09.09.1942

மறைவு
20.10.2013



அமரர்
தாமோதரம்பிள்ளை தயாபரன்
(குரு டீசல் எஞ்ஜினியர்ஸ் - உரிமையாளர்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

கடந்த 20.10.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைப்பதோடு, அன்னார் நோயுற்றிருந்த வேளை அவரைக் கவனித்த கொழும்பு, மட்டக்களப்பு வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் அவரின் மறைவை அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறி துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, குறுந்தகவல் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

30, குறுக்குவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(40244) (7.6.3)

குடும்பத்தினர்.

தருமபுரம் கடற்றொழிலாளருக்கு

# மீன்பிடி உபகரணங்கள்

## 'சேவா லங்கா' நிறுவனம் ஏற்பாடு

கிளிநொச்சி, நவ.19

கிளிநொச்சி தருமபுரத்தில் மீளக்குடியமர்ந்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு மீன் பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள தருமபுரத்தில் மீளக்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன் வந்துள்ள 'சேவாலங்கா' நிறுவனம் அவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக பல லட்சம் ரூபா பெறு மதியான 30 வள்ளங்களையும், வலைகளையும் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண் டுள்ளது.

தருமபுரத்தில் மீளக்குடிய மர்ந்த மீனவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக மீன் பிடிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் இல்லாததால் தொழிலுக்குச் செல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் குடும்பநிலைமை குறித்து கண்டாவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் ரீதியில் வளத்துறை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து திணைக்கள அதிகாரிகளும் கண்டாவளைப்பிரதேச செயலரும் இணைந்து எடுத்த நடவடிக்கையின் பயனாக மீனவர்களுக்கு உதவுவதற்கு முன் வந்துள்ள 'சேவா லங்கா' நிறுவனம், பலலட்சம்ரூபா பெறு மதியான 30 வள்ளங்களையும், வலை களையும் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளது. (க-115)

## சுயதொழில் கொடுப்பனவை பெறலாம்

நவாலி, நவ.19

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவுக்கு விண் ணப்பித்த 5 பேருக்கு கொடுப்பனவுக்கான காசோலைகள் சமூக சேவைகள் திணைக்களத்தால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறித்த பயனாளிகளை செயலகத்துக்கு வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர் ந. அருந்தவராசா அறிவித்துள்ளார்.

இ.கவிதா - சுழிபுரம் கிழக்கு, க.சுகிர்தாயினி - நிச்சாமம் சங்கானை, ந.சகுந்தலாதேவி-பொன்னாலை மேற்கு, ம.சதீஸ்குமார் - நிச்சாமம், மு.கோமளா தொல்புரம் கிழக்கு ஆகியோருக்கே கொடுப்பனவுக்கான காசோலைகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (வ-100)

---

### ஜெனறேற்றர்கள் விற்பனைக்கு

இந்திய உற்பத்தியான பெற்றோலிலும், மண்ணெண்ணெயிலும் இயங்கக்கூடிய 2KW "BIRLA ECOGEN" ஜெனறேற்றர்கள் விற்பனைக்கு உண்டு.

பெற்றோலில் இயங்குவது ரூபா 65,000/=
மண்ணெண்ணெயில் இயங்குவது ரூபா 67,000/=

கிங்ஸ் எலெற்ரோனிக்ஸ்
11-A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3857, (40206)(10,14)

---

### மரண அறிவித்தல்

#### துரைச்சாமி முத்துலட்சுமி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி முத்துலட்சுமி நேற்று முன்தினம் (17.11.2013) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(40242)(7.6.3)

தகவல்:
பிரேம்குமார் (மகன் - கனடா)
சண்டிலிப்பாய். 077 614 6765

---

### தேவை

எவ்விதமான பொறுப்புகளும் அற்ற வீட்டில் தங்கி நின்று பணிபுரியக் கூடிய நற்பண்பு வாய்ந்த ஒரு பணிப்பெண் உடன் பணிக்குத் தேவை.

பணிபுரியும் இடம்: புலோலி தெற்கு, புலோலி.
கந்த முருகேசனார் வீதி.

(40303)(10,14) தொடர்பு: 075 210 2485

---

### வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு ரூபா 300/= வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 30 வரை. வேலை நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை

தொடர்பு:11-A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 3857, (40301)(10,14)

---

### திருத்தி வாசிக்கவும்

நேற்றய (18.11.2013) உதயனின் 4ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய திருமதி விக்னேஸ்வரி (ராதா) பரமேஸ்வரன் என்பவரின் மரண அறிவித்தலில் அவரது கணவர் காலஞ்சென்ற பரமேஸ்வரன் என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. கணவர் பரமேஸ்வரன் என திருத்தி வாசிக்கவும்.

(சி/14932) (10,14) தவறுக்கு வருந்துகின்றோம்.

---

### அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஆகிய கிளைகளில் 15.10.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 19.11.2013 தொடக்கம் 20.11.2013 (செவ்வாய்-புதன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 வரை இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏலவிற்பனைத் திகதியை பிற்போடும் மற்றும் ஏலத்தை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

-ஹற்றன் நஷனல் வங்கி (சி/14931) (10,14)

---

### காணி விற்பனைக்கு

நுணாவில் 190 ஏற்றத்தடியில் (A9 வீதி அருகில்) 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு,
பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 315 7906, 077 589 9483, 077 925 9189

(33006)(7.6.3)

---

# RAHAMA

## Recovery and Humanitarian Action Management Agency

### பதவிநிலை வேண்டுகை (Vacancy)

வாழ்வாதாரச் செயற்திட்ட இணைப்பாளர் (LIVELIHOOD COORDINATOR) வன்னி மாவட்டம்

எதிர்பார்க்கப்படும் தகைமைகளும் அனுபவங்களும்.

- விவசாய துறையில் பல்கலைகழக பட்டம் அல்லது அதற்கு சமமான துறையில் பட்டம் பெற்றிருத்தலுடன் 3 வருடத்திற்கு குறையாத மேற் குறிப்பிட்ட துறைகளில் அனுபவம் பெற்றிருத்தல்.
- உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான வழிகாட்டல் மற்றும் SPAIR நியமங்கள் முதலான சர்வதேச மனிதாபிமான நியமங்கள் பற்றிய அறிவு.
- கிராமிய மட்டத்தில் அமைப்புக்களை மீள்ஒழுங்கமைத்தல் மற்றும் அவற்றை வலுப்படுத்தும் திறன்.
- சிறுகடன் திட்டங்களை உருவாக்கல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான திறன்.
- பாதிக்கப்பட்ட மக்களுடனும் மற்றும் உரிமை சார்ந்த செயற்றிட்டங்களுடனும் பணியாற்றிய அனுபவம்.
- சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகமையாக கொள்ளப்படும்.
- அரசாங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கான திறன்.
- ஆங்கில மற்றும் உள்ளூர் மொழிகளில் பரிச்சயமும் அத்துடன் கணினிசார் தொழிநுட்ப அறிவும்.

மேற்படி தகைமைகளை நீங்கள் கொண்டிருப்பின் எதிர்வரும் 25.11.2013க்கு முன்னதாக தங்களின் CVஐ rahama.cmb@rahama.lk/rahama.vav@rahama.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பெண்கள் விண்ணப்பிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகிறீர்கள்.

அடிப்படை வேதனம்- 30,000/-(மாதாந்தம்)

முகவரி
RAHAMA
இல. 60/15,
சிந்தாமணிபிள்ளையார் கோவில் வீதி, வவுனியா.

(40559)

---

### யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை பழைய மாணவர் சங்கம்

#### வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 01.12.2013 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் : அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம் : 01.12.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி

#### நிகழ்ச்சி நிரல்

1. பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்
2. பொதுக்கூட்டம்
   - 2.1 இறைவணக்கம்
   - 2.2 தலைமையுரை
   - 2.3 செயலாளர் அறிக்கை
   - 2.4 செயற்றிட்ட திரட்டு அறிக்கை
   - 2.5 பொருளாளர் கணக்காய்வு அறிக்கை
   - 2.6 பிற விடயங்கள்
   - 2.7 புதிய நிர்வாகசபைத் தெரிவு
   - 2.8 நன்றியுரை
   - 2.9 கல்லூரிக்கீதம்

குறிப்பு :

1. பிரேரணைகள் இருப்பின் 25.11.2013இற்கு முன் தலைவர்/செயலாளர் பழைய மாணவர் சங்கம், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
2. பழைய மாணவர்கள் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் மற்றும் புதிதாகப் பழைய மாணவர் சங்கத்தில் இணைய விரும்பும் பழைய மாணவர்கள் அங்கத்துவப் படிவத்தைப் பூர்த்தி செய்து அங்கத்துவப் பணத்தை பொருளாளரிடம் செலுத்தி உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*


கு.வேல்சிவானந்தன் — *தலைவர்*
இ.சிறிதரன், சி.தேவகுமாரன் — இணைச் செயலாளர்கள்

(சி/14928) (7.6.3)

---

### மரண அறிவித்தல்

#### திருமதி தம்பிஐயா பவளம்மா



மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கேணியடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா பவளம்மா நேற்று (18.11.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கந்தையா-யோகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மனோன்மணி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற திரு நடராஜா, கன்னிகா பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவபூசணி, மயூரதாஸ், தேவ ராணி, மதியழகன் (லண்டன்), தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சத்தியபாலன், இராஜேஸ்வரி (ஆசிரியை, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), செல்லத்துரை, ராதா (லண்டன்), மோகனராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், மாலினிதேவி, காலஞ்சென்ற கலைச்செல்வன், மணிமேகலை ஆகியோரின் அத்தையும், குமாரலிங்கம், காலஞ்சென்ற ஸ்ரீதரன், சச்சி தானந்தன் (சுவிஸ்), கலாநிதி (சுவிஸ்), உருத்திரா (கொழும்பு), சாந்தலிங்கம் (சுவிஸ்), வசந்தகுமாரி (கனடா), இராஜகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், அனுரதன், மயூரி, தனுஜன், தனுஜா, சிவானுகா,சாருகா, சாரங்கா, சௌமியா(லண்டன்), கேசிகன் (லண்டன்), கேசிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (40306)(17.14) தகவல்: த. மயூரதாஸ் (மயூரன்-மகன்)

---

### மரண அறிவித்தல்

#### மாணிக்கம் கிருஷ்ணசாமி



திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் வீதியில் வசித்துவந்த மாணிக்கம் கிருஷ்ணசாமி நேற்று (18.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் (பவா) அன்புக் கணவரும், மாணிக்கம்-இளையபிள்ளை தம்பதியரின் மகனும், சிவசம்பு-நாகம்மா தம்பதியரின் மருமகனும், சுபீகரன் (சுவிஸ்), பிரதீபா (கிராம அலுவலர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ண தருணி (சுவிஸ்), Dr. காண்டீபன் ஆகியோரின் மாமனும் கந்தசாமி (சுந்தரம்), ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற அரியரட்ணம் மற்றும் ராசரத்தினம், தவமணி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தமிஸ் (சுவிஸ்), அபர்ணா, ஆருஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40307)(10.14) தகவல்: குடும்பத்தினர்.




மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்லாறு மத்திய விளையாட்டுக்கழகத்தின் ஆறாவது கழக தினம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள், விருந்தினர்கள் ஊர்வலமாக-அழைத்து வரப்பட்டனர்.

# சிறைக்கைதிகள் கற்க விரைவில் பாடசாலை

## ஜனவரியில் திறப்பு என்கிறார் சந்திரசிறி கஜதீர

கொழும்பு.நவ.19

சிறைக் கைதிகளுக்கு கல்வியை வழங்கவென வட்டரெக்கவில் நிறுவப்பட்டுவரும் சிறைச்சாலைகள் பாடசாலை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.



இந்தத் தகவலை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பாடசாலையின் முதற்கட்ட நடவடிக்கையின் கீழ் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படும் ஜி.சீ.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள 280 பேருக்கு பட்டப்படிப்பு கல்வியை மேற்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

கல்வி அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுக்கு அமைய இந்தப் பாடசாலை நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு பாடசாலை ஆரம்பிக்கப்படுவது சிறைச்சாலைகள் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

தரம் 9 இல் இருந்து 11 ஆம் ஆண்டு வரை கல்வியைப் பெற்றுள்ள சிறைக் கைதிகளுக்கு இந்தப் பாடசாலையில் கற்பதற்கு அவசியமான வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

உயர்கல்வியைப் பெறுவதற்குத் தகுதிகளைப் பெற்றுள்ள கைதிகள் நாட்டிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளில் இருந்தும் இந்தப் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர் - என்றார். (ச-22)

# கொழும்பை அலங்கரிப்பதற்கு 150 கோடி ரூபா செலவு

## மாநகர முதல்வர் முஸம்மில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.19

பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டுக்காக கொழும்பு நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு 150 கோடி ரூபாவை கொழும்பு மாநகர சபை செலவழித்துள்ளது என்று மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநாட்டுக்காக செலவழிக்கப்பட்ட தொகையில் 80 கோடி ரூபா வெளியுறவு அமைச்சிடமிருந்து மீளக் கோரப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்திகள் மற்றும் அலங்கரிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மாநகர சபை நிதியத்திலிருந்து 50 கோடி ரூபாவும், மீதித் தொகை உலக வங்கி உதவியின் கீழ் பெறப்பட்டன.

இதன் கீழ் நகரத்தின் போக்குவரத்து வீதிகள், நடைபாதைகள் மற்றும் விகாரமாதேவி பூங்கா உட்படப் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன-என்றார். (ச-22)

## அநுராதபுரம் மாவட்டத்தில்

# பெண்களின் விகிதம் அதிகரித்துள்ளது

கொழும்பு.நவ.19

அநுராதபுர மாவட்டத்தில் ஒட்டுமொத்த சனத் தொகையில் பெருமளவிலானோர் பெண்களே என்று புள்ளிவிவரங்கள் திணைக்களத்தின் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவது தொடர்பாக கடந்த 5 ஆம் திகதி தகவல் திணைக்களத்தால் அநுராதபுரம் மாவட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாநாடு ஒன்று தொடர்பாக மாவட்டச் செயலகத்தால் முன் வைக்கப்பட்டிருந்த தரவுகளில் இருந்தே இந்த விடயம் தெரியவந் துள்ளது.



அநுராதபுரம் மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 8 லட்சத்து 56 ஆயிரத்து 232 ஆகும். இலங்கை சனத்தொகையுடன் ஒப்பி டும் போது அது நூற்றுக்கு 4.23 வீதமாகும். இந்த மாவட்டத்திலுள்ள ஆண்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 19 ஆயிரத்து 426 பேர்களேயாவார்.

இதற்கமைய, ஆண்களின் தொகையை விட பெண்கள் தொகையின் அதிகரிப்பு நூற்றுக்கு இரண்டு வீதமாகும். எண்ணிக்கையில் கணக்கிடும் போது ஆண்களை விட அந்த மாவட்டத்தில் அதிகரித்துள்ள பெண் களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 308 ஆகும் என்று தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன. (ச-22)

# நிஸாம் காரியப்பர் பதவி ஏற்றார்

## கல்முனை நகரம் விழாக்கோலம்



கல்முனை மாநகர சபையின் புதிய முதல்வராக முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான எம். நிஸாம் காரியப்பர் நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வ மாகப் பதவி ஏற்றுக் கொண் டார்.

புதிய முதல்வர் பதவி ஏற்பை யொட்டி கல்முனை மாநகரம் பெருவிழாக் கோலம் பூண்டி ருந்தது.

கல்முனைக்குடி ஜும்மா பள்ளிவாசல் முன்றிலிருந்து கல்முனை மாநகர சபை அலுவலகம், பஸார் வரை முஸ்லிம் காங்கிரஸின் மஞ்சள், பச்சைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நகரம் முழுவதும் பொது அமைப் புக்கள், கழகங்கள், விளையாட்டுக்கழகங்கள், வர்த்தக சங்கம் என்பன புதிய முதல்வரை வாழ்த்துக் கூறி வரவேற்கும் பதாகைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

புதிய முதல்வர் நிஸாம் காரியப் பர் நேற்று கல்முனைகுடி, சாய்ந்தமருது ஜும்மா பள்ளி வாசல்களில் இடம்பெற்ற விசேட து ஆ பிரார்த்தனைகளில் கலந்து கொண்டபின் கல்முனை மாநகர சபை பணிமனை வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.


கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பெருந் தொகையான பொது மக்கள், இளைஞர்கள் புடைசூழ ஊர்வல மாக அழைத்து வரப்பட்ட முதல்வர் நிஸாம் காரியப் பருக்கு வீதிகளில் மக்கள் மாலை அணிவித்தும் பூச்சொரிந்தும் வரவேற்பளித்தனர்.

மாநகர சபையில் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்ற பின்னர் பொதுக் கூட்டமும் இடம் பெற்றது. (ச-30)

# சுத்திகரிப்பு நிலையத்தை மூடியதால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு நட்டம்

கொழும்பு.நவ.19

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடிவிட நேர்ந்துள்ளதால் நாளொன்றுக்கு 6 கோடி 46 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை மேலதிகமாகச் செலவிட வேண்டிய நிலைக்கு பெற்றோலியக் கூட்டுத் தாபனம் முகம் கொடுத்துள்ளது.



இந்தச் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வந்துள்ள கால கட்டத்தில் அங்கு சுத்திகரிக்கப்பட்டுள்ள எரிபொருளை தற்போது சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளாக வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

அனைத்து வகை எரிபொருள்களையும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளாக இறக்குமதி செய்யும் செலவினத்தை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் ஏற்க வேண்டியிருப்பதால் எதிர் காலத்தில் எரிபொருள்களின் விலை மட்டங்கள் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. (ச-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கமரூனுக்கு

பொறுப்பை பிரிட்டன் சார்பில் பிரதமர் கமரூன் வெளிப்படுத்தியுள்ளார். தமிழர்களின்பூர்வீக பகுதிக்குச்சென்று வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். சுதந்திரத்துக்குப் பின்னர் வடக் குக்குச் சென்ற முதல் வெளிநாட்டுத் தலைவர் இவராவார் என்பது குறிப் பிடத்தக்கது. எனவே, அவரின் இந்த செயற்பாடுகளையும் பாராட்டி அவருக்கு நாம் கடிதம் எழுதவுள்ளோம்" என்றும் இமானுவேல் அடிகளார் கூறினார்.

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தை

கூட்டத்துக்குத் தலைமை தாங்குவது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

முதலமைச்சருடன் மேற்படி கூட்டம் பற்றியோ, பொருத்தமான திகதி பற்றியோ எதுவும் பேசப்பட்டிருக்கவில்லை. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் இது குறித்து கலந்தா லோசிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தக் கூட்டம் தொடர்பில், சென்ற கூட்டக் குறிப்புகள் எமக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. தாங்கள் எமக்கு அனுப்பிய கூட்ட அறிவித்தலில் கூட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை.

எனவே, நாடாளுமன்ற உறுப்பினராகிய எம்முடன் அல்லது வடக்கு மாகாண முதலமைச்சருடன் கலந்து பேசப்படாமல் மேற்படி கூட்டத்துக்கு அறிவித்தமையானது. அறிவித்தல் கொடுத்தவர்களின் தன்னிச்சையான நடவடிக்கையாகும். எனவே நாம் மேற்படி கூட்டத்தில் பங்குபற்ற மாட்டோம் என்பதைத் தெரியப்படுத்துவதுடன், இந்தக் கூட்டத்தைப் பிற்போடுமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்புகொள்வதற்காகப் பலமுறை முயற்சித்த போதும், தொலைபேசி அழைப்புக்கு அவர் பதிலளிக்கவில்லை.

இதேவேளை,

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான இணைத் தலைமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் இதுவரை எந்தவொரு அறிவித்தலையும் வெளியிட வில்லை என்று கூறப்படுகிறது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில், கூட்டத்துக்கு தலைமை வகிப்பவர்கள் யார் என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதுவரை காலமும் இணைத் தலைவர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுமே செயற்பட்டு வந்தனர்.

தற்போது வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு வடக்கு முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் இணைத் தலைவர்களில் ஒருவராக முதலமைச்சர் நியமிக்கப்பட வேண்டிய நிலையில், இன்னமும் அந்த நியமனம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. (த-5)

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்

கத்தினால் தயாரிக்கப்பட்டன. குறித்த அழைப்புக் கடிதங்கள், யாழ். மாவட்ட செயலக ஊழியர்களால், யாழ். பிரதம தபாலகத்தில் கடந்த 12 ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட குறித்த கடிதத் தொகுதியில் ஒரு தொகுதிக் கடிதங்கள் உரியவர்களுக்கு நேற்றுவரை கிடைக்கவில்லை. வடக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்குரிய கடிதங்களே இவ்வாறு மாயமாகியுள்ளன.

இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபரிடம், சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொண்டு கேட்ட பின்னரே கடிதம் கிடைக்காத விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

இருப்பினும் சகல கடிதங்களும் யாழ். மாவட்ட செயலகத்தினால் யாழ். பிரதம தபாலகத்துக்கு கடந்த 12 ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் கடிதங்கள் உரியவர்களுக்கு கிடைக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பில் அறிவதற்காக யாழ். பிரதம தபாலகத்துடன் பலமுறை தொடர்பு கொண்ட போதும் பொறுப்பான அதிகாரிகள் எவருமில்லை என்று கூறி தட்டிக்கழிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு அவர்களின் கைத்தொலைபேசி இலக்கத்தைக் கோரிய போதும், அவர்கள் அதனை தர மறுத்துவிட்டனர். (த-5)

### கமரூனின்

வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை அரசு சுயாதீனமான விசாரணையைநடத்தாவிட்டால், சர்வதேச விசாரணையை நடத்துமாறு ஐ.நாவிடம் பிரிட்டன் கோரிக்கை விடுக்கும் என்று பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த பிரிட்டிஷ்பிரதமர் டேவிட் கமரூன் கொழும்பில் வைத்து எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன வென்று நேற்று மாலை அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனிடம் 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக் கும் பிரிட்டன் பிரதமர், இலங்கை அர சுக்கு காலக்கெடுவையும் விடுத்துள்ளார். இதனைக் கூட்டமைப்பு வரவேற் கின்றது.

இலங்கை அரசு சர்வதேச சட்டங்களை மீறிச் செயற் பட்டுள்ளது என்பது உலகறிந்த விடயம். இதை இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கை அரசின் இந்தச் செயல்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இரண்டு தீர்மானங்களை சர்வதேச நாடுகள் நிறைவேற் றியுள்ளன.

ஆனால், உள்நாட்டில் இது தொடர் பில் நம்பகரமான சுயாதீனமான விசாரணையை எதனையும் இலங்கை அரசு இதுவரை நடத்தவில்லை.

இந்நிலையில், சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு முகம் கொடுக்க வேண்டி வந்துள்ளது. இந்த விசாரணை நடைபெற்றே தீரவேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமேயில்லை- என்றார். (த-சி)

### மனித உரிமைகளை

மனித உரிமை விவகாரங்களுக் குப் பதிலளிக்கத் தவறினால்,ஐ.நா மனித உரிமைகள் சபையில், அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று பிரிட்டன் பிரதமர் விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பாக, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், இது பொதுநலவாயத்துக்குள் உள்ள விவகாரம். அதே வேளை, இது மனித உரிமைகள் பற்றிய விவகாரம் என்று நான் நம்புகிறேன். நாடுகளுக்கிடையில் பேச்சுக்களும் தொடர்பாடலும் இருக்க வேண்டும்.

மனித உரிமை விவகாரங்களில் அனைத்து நாடுகளுடனும் பேச்சு மற்றும் தொடர்பாடல் மூலம் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் கொள்கையை நாம் எப்போதும் பேணி வருகிறோம். அனைத்துலக மனித உரிமைகளை ஊக்குவிக்க ஆக்கபூர்வமாக செயற்படுகிறோம். என்று குறிப்பிட்டார்.

இலங்கையுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள சீனா முதல் முறையாக இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து, ஆச்சரியமளிக்கும் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை தோற்கடிப்பதற்கு சீனா தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

### சர்வதேச

உரிமை மாநாடு தான் இலங்கையில் நடைபெற்றது என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

பொதுநலவாய மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் 98 பரிந்துரைகள் உள்ளடங்குகின்றன. இவற்றுள் மனித உரிமைகள் குறித்தே அதிகமான பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இந்த விடயங்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படவில்லை. ஏனெனில், இந்த மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அரசு வெளிப்படுத்தவில்லை.

இந்த 98 பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்டதனூடாக இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைப் பொறி முறைக்கு இணங்கியுள்ளார். இதனூடாக நாட்டுக்குப் பெரும் அபாயம் ஏற்படப்போகிறது. சர்வதேச விசார ணைக்கு இடமளித்து இந்த அரசு நாட்டுக்குத் துரோகம் இழைத்து விட்டது. இதை எம்மால் ஏற்றுக்கொள் ளவே முடியாது.

#### கின்னஸ் சாதனை படைத்தது அரசு

பிரிட்டன் இளவரசர் சார்ள் ஸூடன் அருகில் அமர்ந்து புகைப்படம் எடுப்பதற்காக இந்தப் பொதுநலவாய மாநாடு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஒரு புகைப் படத்தை எடுப்பதற்காக ஆயிரத்து 400 கோடி ரூபாவை அரசு செலவிட்டுள்ளது. இதற்காகத் தான் அரசு இந்த மாநாட்டையே நடத்தியது. மாநாட்டுக்கான செலவுகள் குறித்து அரசு நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆயிரத்து 400 கோடி ரூபா செலவு செய்து நாடு அடைந்த பயன் என்ன?

#### சர்வதேச விசாரணைக்கு ஐ.தே.க. எதிர்ப்பு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தியுள்ளார். ஆனால் மாநாட்டை நடத்தி சர்வதேச விசாரணைப் பொறி முறைக்கான அனுமதியை அரசே வழங்கியுள்ளது - என்றார்.

#### ஒரு தலைவருக்கு 70 கோடி ரூபா

பொதுநலவாய அமைப்பில் 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த 54 நாடுகளுள் 21 நாடுகளின் தலைவர்கள் மட்டுமே இலங்கை வந்துள்ளனர். இவர்களுள் ஒரு நாட்டின் தலைவருக்காக சுமார் 70 கோடி ரூபாவை அரசு செலவுசெய்துள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் இடம் பெற்ற மாநாட்டில் 36 நாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்றனர் - என்றார். (த-சி)

### பிரிட்டனின்

மாநாட்டை நடத்திய இந்த அரசுக்கு எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எதிர் வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை விசாரணைகளை நடத்தாவிட்டால் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை தவிர்க்கவே முடியாது என்ற பிரிட்டன் பிரதமரின் அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மனித உரிமை விவகாரங்களைக் காரணங்காட்டி எமது உள்நாட்டு விவ காரங்களில் பிரிட்டன் கையடிப்பதை நாம் விரும்பவில்லை. அதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறோம். ஆனால், உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் கையடிப்பதற்கு வழி சமைத்துக் கொடுத்தது யார்? மஹிந்த அரசின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாகவே இந்நிலை உருவாகியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டில் விசாரணையை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிப்போம் என இதற்கு முன்னரும் பல தடவைகள் இலங்கை அரசு உறுதி மொழிகளை அள்ளி வீசியுள்ளது. அழுத்தங்களிலிருந்து விடுவிப்பதற்காகவே அரசு இவ்வாறு செய்துள்ளது. எனினும், விசாரணைகளை அது முன்னெடுக்கவில்லை. இதன் காரண மாகவே பிரச்சினை சர்வதேசம் வரை சென்றுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் மார்ச்சில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார். இது அரசுக்கு சாதகமாக அமையாது. பொதுநலவாய மாநாட்டின் போது அரசு ஊடகங்களை நடத்திய விதம் குறித்து அதிருப்தி ஏற்பட்டுள்ளது. எனவே, மார்ச்சில் அரசுக்கு கடும்நெருக்கடிஏற்படும்." என்றும் அவர் கூறினார். (த-சி)

### மாவீரர்

தெரிவித்ததாவது, தமிழ்த் தேசிய விடுதலையை முழுமூச்சாக நிராகரிக்கின்ற ஜனாதிபதியின் நினைவாக நடைபெறும் நிகழ்ச்சியில், தமிழ்த் தேசியத்தில் தீவிர பற்றுறுதி கொண்ட நான் கலந்து கொண்டிருக்கின்றேன். அதுவும் யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கு மக்கள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டிருக்கும் தங்கள் நிலங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு அனுமதி கோரியும் காணாமற் போனவர்களைக் கண்டு பிடித்துத் தரக்கோரி அவர்களின் உறவுகள் மிகவும் உணர்ச்சிபூர்வமான போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் போது, நான் இந்த மரநடுகை நிகழ்ச்சியில் இராணுவத்தினரோடு சேர்ந்து கலந்துகொண்டிருக்கின்றேன். அதற்குக் காரணம் சுற்றுச்சூழலியலாளர்களுக்கு இனம், மதம், மொழி போன்ற பேதங்கள் இல்லை என்பதும் சூழலியல் நடவடிக்கைகளுக்குத் தேசிய எல்லைகள் கிடையாது என்பதும் தான்.

நாம் இந்த மரங்களை நட்டுக் கொண்டிருக்கும் இதே சமயம் இந்த வன்னிப் பெருநிலப் பரப்பில் காடுகள் கண் மூடித்தனமாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகள் இந்த மண்ணில் நிலை கொண்டிருந்த காலப் பகுதியில் புதிய காடுகள் வளர்த்தெடுக்கப்பட்டன.

இதேவேளை, அண்மையில் நான் நெடுந்தீவுக்கு சென்றபோது கடற்கரையில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுவதாக அங்குள்ள மக்கள் சுட்டிக்காட்டினர். அந்தப் பகுதிக்கு நான் சென்று பார்த்தபோது காலாவதியான அனுமதிப் பத்திரத்தை வைத்துக்கொண்டு அரசியல் கட்சி ஒன்றின் செல்வாக்குப் பெற்ற நபர் டிராக்டரில் மணல் ஏற்றி வந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டியவர்கள் பொலிஸாரே. அவர்கள் பார்த்திருக்க எமது வளம் கொள்ளை போகின்றதெனில் அதில் அவர்களுக்கு பங்கு உண்டு.

இவைபோன்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அடிப்படையிலேயே வடக்கு மாகாண சபையினராகிய நாம் பொலிஸ் அதிகாரத்தை கோரி நிற்கின்றோம்.

முதலமைச்சரின்கோரிக்கைக்கு பொலிஸ் அதிகாரி, சிங்கள மக்களும், தமிழ் மக்களும் வெற்றிலை சாப்பிடுவதால் இரண்டு பேரும் ஒரே பண்பாட்டைக் கொண்டவர்கள் என்ற பொருத்தமற்ற பதிலைக் கூறியிருந்தார். இங்கு எவருடைய பண்பாடும் உயர்ந்ததோ தாழ்ந்ததோ அல்ல. நாம் வேறு பண்பாட்டைக் கொண்டவர்கள்.

அதேபோன்றுதான் சூழலியல் சிந்தனைகளும் வேறானவை. இதனால் தான் எமது தேசிய சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும் என்கிறோம். இதன் பொருள் பிரிவினைவாதமல்ல என்றும் தெரிவித்தார். (த-5)


# முல்லை உதயசூரியன் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.19
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் எவ். ஏ. வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை பிறிலியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்முனை பிறிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் முல்லைத்தீவு செம்மலை



உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (து-23)

## சதுரங்கப் போட்டி



யாழ்ப்பாணம், நவ.19
இலங்கை சதுரங்க சம்மேளனம் 2 ஆவது தடவையாக நடத்தும் தனியார், அரச திணைக்கள ஊழியர்களுக்கு இடையிலான சர்வதேச தரப்படுத்தல் சதுரங்கப்போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.
வெற்றி பெறும் அணிகளுக்கு பணப் பரிசில்கள், பதக்கங்கள் என்பன வழங்கப்படவுள்ளன. (து-23)

## 'பி' பிரிவு அணிகளின் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.19
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ' பி' பிரிவு அணிகளுக்கு இடையே நாளை புதன்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப.3.30மணி
திருக்குமரன் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ். ஐக்கியம் விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.30 மணி
வளர்மதி விளையாட்டுக் கழகம் எதிர்சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 'பி' அணி. (து-23)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் டிசெம்பரில்

யாழ்ப்பாணம், நவ.19
யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
இந்தப் போட்டியில் 01-01-1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்கள் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சி, வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட



பாடசாலைகள் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபரிடமும், யாழ்.தீவகக் கல்வி வலயப் பாடசாலைகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் பேட்டி பணிஸ்ரரிடமும், வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் உதயனனிடமும் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (து-23)

# வவுனியா யுனிபைட் கிரிக்கெட்டில் சம்பியன்




வவுனியா, நவ.19
வவுனியா நியூபேட் விளையாட்டுக்கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய நியூபேட் வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் குட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துயுனிபைட் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய குட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 18.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் றொகான் 28 ஓட்டங்களையும், கரி பிரணவன் 13 ஓட்டங் களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்து வீச்சில் யூனிபைட் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரசாந் 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் மயூஸ்சன் 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
85 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யுனிபைட் விளையாட்டுக்கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது துஷாந் 56 ஓட்டங்களையும் நிதர்சன் 27 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் குட்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் வினோஷன் 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை வீழ்த்தினர். (து-23)

# சாதனையாளனுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்,நவ.19
இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் லிவிங்ரனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட் தந்தை ஜெறோ செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (து-23)

# ஆவரங்கால் இந்து, ஆவரங்கால் மத்தி இறுதியாட்டத்தில் மோதுவதற்கு தகுதி

யாழ்ப்பாணம், நவ.19
அமரர் முத்துலிங்கம் ஜெகநாதனின் ஞாபகார்த்தமாக மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றன.
இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி





பெற்றுள்ளன.
முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்றசெற்கணக்கில்வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோத விருந்தது.
இந்த ஆட்டத்துக்கு அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சமுகம் கொடுக்காமையால் ஆவரங்கால் மத்திய கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.
இதன் காரணமாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (து-23)

## தென்னாபிரிக்க 20/20 அணிக்கு தலைவராக பப் டு பிளெஸிஸ்



தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட 20/20 தொடருக்கான தென்னாபிரிக்க குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தத்தொடருக்கானதென்னாபிரிக்கக் குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடர் நிறைவடைந்ததையடுத்து, தென்னாபிரிக்காவில் குறுகிய கால இடைவெளியில் இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தத் தொடருக்கான குழாம் பப் டு பிளெஸிஸ் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் நிறைவடைந்த 20/20 தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிய அதே குழாமையே தென்னாபிரிக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

குழாம்: பப் டு பிளெஸிஸ், ஹசிம் அம்லா, ஹென்றி டேவிட்ஸ், குயின்டன் டீ கொக், ஏபி.டி.வில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, இம்ரான் தாஹிர், றயன் மக்லரன், டேவிட் மில்லர், மோர்னி மோர்க்கல், வெய்ன் பார்னெல், ஆரொன் பங்கிசோ, டேல் ஸ்ரெய்ன், லொன்வபோ சொற்சொபி, டேவிட் வியஸி. (கு)

நவம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தத் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

## இளவரசியை கரம் பிடிக்கிறார் ஸ்ரீசாந்த்




சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட இந்திய வீரர் ஸ்ரீசாந்துக்கு இந்திய கிரிக்கெட் சபை ஆயுள் தடை விதித்துள்ளது. இந்நிலையில் இவருக்கும், ஜெய்ப்பூரின் அரச குடும்பத்தை சேர்ந்த பெண்ணுக்கும் டிசம்பர் 12ஆம் திகதி குருவாயூர் கோவிலில் திருமணம் நடைபெறுகிறது.

ஸ்ரீசாந்த்தை மணக்கப் போகும் பெண்ணின் பெயரை இதுவரை வெளியிடாமல் வைத்துள்ளனர்.

இதற்கிடையே இது காதல் திருமணம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 2006ஆம் ஆண்டு ஜெய்ப்பூரில் நடந்த கிரிக்கெட் போட்டியின் போது அந்தப் பெண்ணும், ஸ்ரீசாந்தும் சந்தித்து காதலில் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீசாந்த் சூதாட்ட விவகாரத்தில் சிக்கிய போது, அந்தப் பெண் அவருக்கு ஆதர வாக இருந்ததுடன், தேவையான சட்ட உதவிகளையும் செய்து வந்தார் என கூறப்படுகிறது. அந்தப் பெண் மட்டுமல்லாது, அவரது குடும்பமும் ஸ்ரீசாந்த்துக்கு ஆதரவாக இருந்ததாம், இதனைத் தொடர்ந்து இருவருக்கும்திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர். (கு)



## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்: நைஜீரியா, ஐவரிகோஸ்ட் தகுதி

பிரேசிலில் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த நைஜீரியா மற்றும் ஐவரி கோஸ்ட் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

21ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 2014ஆம் ஆண்டு ஜூன் முதல் ஜூலை மாதம் வரை பிரேசிலில் நடைபெற உள்ளது. இப்போட்டியில் 32 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கின்றன.

போட்டியை நடத்தும் நாடு என்ற அந்தஸ்தில் முதல் அணியாக பிரேசில் தகுதி பெற்றது. இதைத் தொடர்ந்து மற்ற அணிகள், கண்டங்கள் வாரியாக நடத்தப்படும் போட்டிகளின் அடிப்படையில் தகுதி பெற்று வருகின்றன.

ஆபிரிக்க கண்டத்தில் இடம் பெற்றுள்ள அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தகுதிச் சுற்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

எத்தியோப்பிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் நைஜீரிய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியைத் தொடர்ந்து தகுதிச் சுற்று புள்ளிகளின் அடிப்படையில், உலகக் கிண்ணத்துக்கு நைஜீரியா தகுதி பெற்றது. இதன்மூலம், ஆபிரிக்க கண்டத்திலிருந்து 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கு முதன்முறையாக தகுதி பெற்ற அணி என்ற பெருமையையும் அந்த அணி பெற்றது. மேலும், 5ஆவது முறையாக அந்த அணி உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்றுள்ளது. இதற்குமுன்னர், 1994, 1998, 2002 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் அந்த அணி உலகக் கிண்ணத்தில் பங்கேற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்க கண்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள ஐவரி கோஸ்ட் நாட்டைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணி, தொடர்ந்து 3ஆவது முறையாக உலகக் கிண்ணப்போட்டிக்குதகுதிபெற்றது. ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றதகுதிச்சுற்றுப்போட்டியில்செனகல்அணிக்குஎதிராக 1-1என்ற கணக்கில் ஐவரிகோஸ்ட் சமநிலை செய்தது.

இந்த ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் செனகல் அணி ஒரு கோல் அடித்தது. எனினும், கூடுதல் நேரத்தில் ஐவரிகோஸ்ட் ஒரு கோல் அடித்து ஆட்டத்தை சமப்படுத்தியது. இதனால், புள்ளிகள் பட்டியலின் அடிப்படையில் உலகக் கோப்பைக்கு ஐவரி கோஸ்ட் தகுதி பெற்றது. (கு)

## சிறந்த மனிதர் சச்சின்



கிரிக்கெட்டின் சகாப்தமான சச்சின் டெண்டுல்கரை இலங்கை அணியின் பிரபல சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் பாராட்டியுள்ளார். இலங்கை அணியின் பிரபல சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் சச்சின் பற்றி குறிப்பிடுகையில், சச்சின் மிகப்பெரிய சாதனையாளர். ஒவ்வொரு விளையாட்டிலும் எங்கள் அணிக்கு அவரின் இலக்கு முக்கியமான ஒன்றாக இருந்தது. எங்கள் தலைமுறை விளையாட்டு வீரர்களில் அவர் உண்மையான கனவான் (ஜென்டில்மன்) என்று பாராட்டியுள்ளார். (கு)

# சந்திமால் தலைமையில் இலங்கையின் 20/20 அணி



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

டினேஷ் சந்திமால் தலைமையிலான 15 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்த நிலையில், அந்தக் குழாமில் இடம்பெற்றிருந்த திமுத் கருணாரத்ன, ரங்கன ஹேரத், அஷன் பிரியஞ்சன் ஆகிய மூவருக்கும் 20/20 குழாமில் இடம் கிடைக்கவில்லை.

மாறாக, றமித் றம்புக்வெல்ல, சீக்குகே பிரசன்ன ஆகியோருக்கு இக்குழாமில் இடம் கிடைத்துள்ளது. அண்மைக் காலத்தில் இருவரும் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தியிருந்த நிலையிலேயே இருவருக்கும் இடம் கிடைத்துள்ளது.

அண்மைக்காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடர்களில் இலங்கை அணி தனது சிரேஷ்ட வீரர்களுக்கு சுழற்சி அடிப்படையில் ஓய்வினை வழங்கி வந்த போதிலும், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்ஷான் ஆகிய மூவரும் இக்குழாமில் இடம் பிடித்துள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: டினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார, லசித் மலிங்க, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்ஷான், குசால் ஜனித் பெரேரா, அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், சீக்குகே பிரசன்ன, றமித் றம்புக்வெல்ல, சுரங்க லக்மால், திஸர பெரேரா, நுவான் குலசேகர.

(கு-400)

# சாமுவேல்ஸ், ஷில்லிங்போர்ட் பந்துவீச்சுக் குறித்து சர்ச்சை

மேற்கிந்திய தீவுகள் அணியின் சாமுவேல்ஸ், ஷில்லிங்போர்ட் ஆகியோரின் பந்து வீச்சில் சந்தேகம் எழுந்துள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தெரிவித்துள்ளது.

இருவரது பந்துவீச்சையும் பிரத்தியேகமாக ஆய்வு செய்யவும் ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது. இதில் அவர்கள் விதிமுறைகளை மீறி செயல்பட்டது தெரிந்தால், போட்டிகளில் விளையாட தடை விதிக்கக் கூடிய வாய் ப்பு உள்ளது.

இந்தியாவுக்கு எதிராக கொல்கத்தா மற்றும் மும்பையில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி மோசமாக தோல்வி அடைந்தது. 2ஆவது டெஸ்ட்போட்டியின் 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில், சாமுவேல்ஸ் மற்றும் ஷில்லிங்போர்ட் ஆகிய இருவரின் பந்து வீச்சில் சந்தேகம் இருப்பது தெரிய வந்தது. சாமுவேல்ஸின் குயிக்கர் டெலிவரி' மற்றும் ஷில்லிங் போர்ட்டின் தூஸ்ரா' பந்து வீச்சு முறையில் சந்தேகம் எழுந்தது.



இதைத் தொடர்ந்து இது குறித்து ஐ.சி.சியிடம் புகார் செய்யப்பட்டது. இருவரும் தங்கள் பந்துவீச்சு முறைகளை ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது.

ஆய்வில், ஏதாவது முறைகேடுகள் இருப்பது தெரிய வந்தால் இருவரும் போட்டித் தடைக்கு உள்ளாக்கப்படுவர். ஆனால், ஆய்வு முடிவு வரும் வரை அவர்கள் போட்டிகளில் பங்கேற்க தடையில்லை. இருவரது பந்து வீச்சு மீது இதற்கு முன்பும் சந்தேகம் எழுந்தது குறிப்பிடத்தக்கது.

(கு-400)

# ஆனந்துக்கும் பாரத ரத்னா கொடுங்கள்



பிரபல செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்துக்கும் பாரத ரத்னா விருது கொடுக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கங்குலி கூறுகையில், சச்சின் டெண்டுல்கருக்கு பாரதரத்னா விருது தரும் மத்திய அரசின் முடிவு வரவேற்புக்குரியது, பாராட்டுக்குரியது.

அதேபோல, இந்த விருதைப் பெறக் கூடிய தகுதியுடைய வீரராக என் மனதில் விஸ்வநாதன் ஆனந்த் தோன்றுகிறார். அவருக்கும் பாரத ரத்னா பெற முழுத் தகுதிகள் உள்ளன. ஐந்து முறை உலகச் சம்பியன் பட்டத்தை வென்று இந்தியர்களுக்குப் பெருமை சேர்த்தவர்.


**வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்**

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிப்ளோமா-1yr டிகிறி-2Yrs
G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.முடிவுதிகதி24Nov
பல்கலைக்கழக மாணவர்கள் உத்தியோகத்தர்களும் பயிலலாம்.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு:Type <BIT><your name> & send to 772 395 895
BatchI:sunday only 8am,Batch II:sat&sun2PM,BatchIII:Mon-Thu 4.30pm

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

அரச,தனியார் ஊழியர்கள்,பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி,ஞாயிறு பிரிவு ஆரம்பம் 23.11.2013 சனிக்கிழமை
பிரிவு:1 03.00-05.00
3 மாதத்தில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
SAAMSON Language School 379, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

**தேவை**

கிளிநொச்சியில் (Near Hospital) அமைந்துள்ள வெளிநாட்டு பொதிகள் ஆவணங்கள் அனுப்பும் காரியாலயம் ஒன்றிற்கு தகைமையுள்ள பெண் ஒருவர் தேவை.
தொடர்பு : 077 416 9026 (40558)(7.6.3)

**காணி விற்பனை**

நெல்லியடி ஆச்சிரமத்துக்கு அருகில் வடலித் தோட்டம், தோலைக் கிரானை எனும் இடத்தில் 3.75 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 788 5664 (40007)(7.6.3)

**கனடாவில் படிக்க உழைக்க**

2 வருட விசா, படிக்க
2 இலட்சம் வரை உழைக்க
சட்ட ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

**நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை**

2 வருடத்தில் PR பெற்றால் ஆஸ்திரேலியா பறக்கலாம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

**சைப்பிரசில் படிக்க IELTS தேவையில்லை**

O/L போதும்,
21 வயதிற்கு மேல் A/L தேவை
பகுதி நேரமாக ஒரு இலட்சம் உழைக்கலாம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

**ஆரம்பமாகின்றது**

கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கான போட்டிப்பரீட்சை வகுப்புக்கள் Online இல் வீடியோ ஊடாக 40 மணி நேரம் நடைபெறும்.
ஆரம்பம் : 24.11.2013
NOTE:
ஒரு பிரிவில் 50 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்
8 பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறும்.
மேலதிக விவரங்களுக்கு.
http : www.grade4 - 5scholarship.com
077 8999940, 075 6575556

**2014ம் ஆண்டிற்கான நாட்காட்டிகள்**

படக் கலண்டர்கள், வாக்கிய பஞ்சாங்க கலண்டர்கள், மற்றும் எல்லா வகையான நாட்காட்டிகளையும் நியாய விலையில் அச்சிட்டும், சிலிப்தாள்களாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982


## மரண அறிவித்தல்

### தம்பையா செல்வராசா (ஆசை)

[லொறி உரிமையாளர் – சாரதி]



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா செல்வராசா 18.11.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சிவமணியின் பாசமிகு கணவரும், சசிகரன், லகிதாஸ், காந்தரூபன், நிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி.

தகவல்:குடும்பத்தினர்
077 210 5352 (40249)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.